போன் நெ. 15.

திராவிடநாடு

மலர் 13 | 14—11—54 | இதழ் 20

பறந்து சென்று!

சிறு சொல்!

சிந்தை யெல்லாம் குடைந்தது நெடுஞ்செழியனுக்கு.

கொட்டுங்கள் முரசு! குதிரைகளின் குளம்படிச் சப்தம் எட்டட்டும் எதிரிகளின் எல்லையை! — என்று முழக்கமிட்டான்.

இப்போதே செல்வோம்! அந்தச் சிறு சொல் வீசிய சிறுமதியாளர்களை, முரசொடு பிடித்து, அடிபணிய வைக்காவிடில், யானோ மன்னன்! யானோ மன்னன்!! என்று, கர்ஜித்தான்.

அவனது குரல் கேட்டு, வீரர்கள், கிளம்பினர்—வீறுகொண்ட புலிகளைப் போல்! நாடே, அதிர்ந்தது — போர்ப் பறை கேட்டு!!

நெடுஞ்செழியன் மனதில் நெருப்பைக் கிளறிய, அந்தச் சிறு சொல் எது?

மாற்றார், பழித்தனராம்!

நெடுஞ்செழியனையா? அல்ல! அவனது அரசை!!

'மக்களை மறந்த அரசு' என்று ஏசினராம்—எதிரிகள்.

ஆரியப் படை கடந்த அந்தப் பாண்டியப் பெருவழுதியால், இந்தக் குற்றச் சாட்டைத் தாங்க முடியவில்லை.

என்ன எண்ணுவர், என் நாட்டு மக்கள்?

சிறு சொல் வீசிய அந்தச் சிறு மதியாளர்களின் இடுப்பொடிக்க வில்லையானல், என் அரசு நிழலில் வதியும் மக்கள், என்னைக் கொடுங்கோலன் என்று கருதுமாறல்லவோ, ஏற்படும்?

அரசை ஏசிய எதிரிகளுக்கு அஞ்சினேன்! அவர்தம் துடுக்கடுக்கத் தொடை நடுங்கினேன்! வீசிய பழியையும் ஏற்றுக் கொண்டான், எம்மன்னன். எதிர்த்து மடக்க ஆற்றலில்லை போலும்! இவன், கொடியவன்தான் போலும்! என்றன்றோ, கருதிவிடுவர்.

இதனைச் சகிக்க முடியாது! வீரர்காள்!! புறப்படுங்கள் — புத்தி புகட்டி விட்டு வருவோம்.

*

"சிறு சொற் சொல்லிய
சினங் கெழு வேந்தரை
அருஞ் சமஞ் சிதையத்
தாக்கி முரசோடு
ஒருங்ககப்படேஎ னாயிற்
பொருந்திய வென்னிழல் வாழ்நர்
சென்னிழற் காணது
கொடியனெம் இறை யெனக்
கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேனாகுக"

*

தமிழ்ச் சோலை தரும் கவிதை, மலர் இது! கவிதையின் அழகுமட்டுமல்ல, அற்றைய நாள் ஆட்சியின் மாண்பும் தெரிகிறது. சிறு சொல், வீசினராம் எதிரிகள்! அந்தச் சிறு சொல், பாண்டியப் பெரு வழுதியின் சிந்தையைக் கிளறி, போர் முழக்கம் செய்யச் செய்திருக்கிறது. மாற்றாரிடையிலிருந்து கூட, அரசு, நீதி தவறி நடக்கிறதெனும் பழியை ஏற்க, அந்தப் பாண்டிய மன்னன் மனது தாளவில்லை. அவ்வளவு தூய்மையான இதயம்! குடிமக்களைக் கண்ணெனக் காத்து, உயிரென ஓம்பும் உன்னத உள்ளம்!! அதனாலேயே சிறு சொல் கேட்டதுமே ரினந்தான் — எழுந்தான். பாடல், பாண்டியனின் பெருமையினைமட்டுமின்றி ஆட்சியின் மாண்பினையும் விளக்குகிறது.

எதிரிகளும் போற்றவேண்டும் -அந்நாள் அரசின் கோட்பாடு இது.

ஆனல், இன்றென்ன காண்கிறோம் —எதிரிகளும் போற்றவில்லை; உற்றாரும் போற்றவில்லை.

சிறுசொல் அல்ல; வர்ணிக்கமுடியாத வார்த்தைகளால் ஏசுகின்றனர்- பேசுகின்றனர், அரசை.

"குடிமக்கள் என்னைப்பற்றி என்ன எண்ணிவிடுவரோ?" என்கிருன், கொற்றவன்.

"அவர்கள் என்ன எண்ணினுலும் அதைப்பற்றிக் கவலையில்லை" இது, இற்றைநாள் அரசினர்போக்கு.

காலச்சக்கரம் ஓடவேண்டும்; கட்சி முரசு ஒலிக்கவேண்டும் — அதற்காக எதையும் செய்வோம் என்று கிளம்புகின்றனர். இழிசொல், இவர்களுக்கு, சுவைப்பண்டமாகிவிட்டது! 'தூற்றுமே நாடு' எனும் அச்சம் உள்ளத்தை விட்டு அகன்றுவிட்டது.

அண்மையில், காமராஜரும், அவர் தம் 'தோழர்' சுப்பிரமணியமும்பறந்து சென்றனராம்.

பெருமழையால் சேதப்பட்டுக் கிடந்த தென்தஞ்சையைப் பார்க்கப் போயிருப்பார்கள்—அதனுல் தான் 'பறந்து' சென்றிருப்பார்கள் என்று எண்ணத் தோன்றும், பிறருக்கு.

அவர்கள், ஆகாய விமானமூலம் அவசரமாகச் சென்றது, அங்கல்ல; கோவைக்கு.

கோவைவாழ் ஆலைத் தொழிலாளரின் கிளர்ச்சிகளைக் கண்டறிந்து

ஆவன செய்யும் நோக்குடன் சென்றிருப்பார்கள்-என்று எண்ணுவீர்கள். அல்ல, அல்ல—அதற்காக அல்ல! நிதி பெற்றனர்!!

அரசின் திட்டங்கள் பலதை நிறைவேற்றப் பணமில்லை — வேலையில்லாதோர் பிரச்னையை ஒழிக்கப் புது ஆலைகள் சிலவற்றை ஆரம்பிக்கலாம் என்றுலோ பணமில்லை — மாவட்டத்திற்கோர் தொழிற்கல்லூரியை ஆரம்பிக்கலாம் என்றாலும் பணமில்லை—சர்க்கார் சிப்பந்திகளின் குறைகளைத் தீர்க்க, தவிக்கும் விவசாயிகளின் வரியைக் குறைக்க, பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறது, சர்க்கார்—அதற்காக நிதி பெற்று வரச் சென்றிருப்பார்கள். ஏனெனில், இருவரும் காங்கிரஸ் மந்திரிகள்—என்றே எண்ணுவீர்கள்.

அல்ல, அல்ல; அந்தக் காரியங்களுக்காக அல்ல—அரசுத் தலைவரும், அவர்தம் தோழரும், சீமான்கள் வதியும் கோவைக்குச் சென்றது.

ஆவடியில், அண்மையில் நடைபெறப்போகிறதாம்—அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு; அதற்கு நிதி சேர்க்கச் சென்றனராம்.

ஆலையரசர்களும், பணுதிபதிகளும் விருந்துவைத்து, முதலமைச்சருக்கு 'காணிக்கை' செலுத்தினராம்.

கோவை பஸ் சொந்தக்காரர்கள் சங்கம் ரூபாய் **15000.**

ஆலையரசர்கள் சங்கம் ரூ. **78,000.**

சில மணி நேரத்தில் பெற்றுக் கொண்டு திரும்பினராம், காமராஜரும் -நிதி அமைச்சரும்.

காலையில் சென்று நண்பகல் திரும்பினர்—அதற்குள், அவர்கள் பெற்ற தொகை ரூ 93000 என்று பெருமையோடு வெளியிடுகின்றன—ஏடுகள்.

சில மணி நேரம்! அதற்குள் சுமார் லட்ச ரூபாய்!!—இந்தச் செய்தி, காங்கிரஸ் தோழர்களுக்குக் களிப்பையும், காமராஜர் என்றுல் சீமான்கள் எல்லாம் ஓடோடி வந்து காணிக்கை தருகின்றனர் பாரீர், என்ற அகமகிழ்ச்சியையும் உண்டாக்கியிருக்கும்.

மாநாட்டினை எப்படிஎப்படி நடத்தவேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருப்போர், இந்த லட்ச ரூபாயில், எத்தனை கீற்றுகள் வாங்கலாம், எவ்வளவு சோபாக்கள் கொண்டு வரலாம், எப்படி யெப்படி 'போஸ்டர்'கள் ஒட்டலாம், என்றெல்லாம் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பர்.

அதுபோல, 'லட்சம்' வழங்கிய ஆலையரசர்களும் சீமான்களும், தத்தமது மாளிகையில், திட்டம் தீட்டாமலிருக்க மாட்டார்கள்.

"காங்கிரஸ் மாநாடு! காசு, யார் கொடுத்தது தெரியுமா? நாங்கள்!!"

"நாட்டு மக்களின் ஒரே கட்சி என்கின்றனர். ஆனுல், அந்தக் கட்சி நடக்க, காசு யாரிடமிருந்து செல்கிறது, தெரியுமா? எங்களிடமிருந்து!"

"ஏ, தொழிலாளர்களே! உங்களைத் தான்—காங்கிரஸ் கட்சியின் சார்பில் தொழிற் சங்கம் வைத்துக்கொண்டு, 'எங்கள் காங்கிரசுக்கும் தொழிலாளர் மாட்டு சிரத்தை உண்டு என்று செப்பிக் கொண்டிருக்கிறீர்களே! கபர்தார்!! இனிமேல், அந்தச் சலுகை, இந்தச் சலுகை என்றெல்லாம் கேட்கக் கூடாது எங்களை"

மிரட்டும் குரல்! களிக்கும் பேச்சு!! சீமான்கள், சிங்காரமாகப் பவனி வருவர்.

இன்னும் சில ஆலையரசர்கள், இப்படியும் சொல்லுவர்!

"என்னய்யா — சுப்பையா. போன வாரம், அந்த மூலையில் கூட்டம் போட்டு பேசினீராமே. கதர் வாங்குங்கள்! அதுவே, காங்கிரசின் கொள்கை! ஆலை சரக்குக்கு உண்மையான காங்கிரஸ்காரர்கள் ஆதரவு தரக் கூடாது—அது, மகாத்மாஜீயின் உடலைப் போட்டு மிதிப்பதாகும். ஒவ்வொருவரும் கதரையே கட்டவேண்டுமென்று. இப்போது, காங்கிரஸ் மாநாட்டுக்கு காசு தந்திருப்பது யார் தெரியுமா? கதரல்ல, ஐயா! மில்!! கவனத்தில், வைத்துக்கொள்ளுங்கள்"

ஒரு லட்சம், தந்திருக்கிருர்கள் — முதலாளிகள்.

ஆனுல், அந்த ஒரு லட்சம், எத்தனை லட்சம் லாபத்தைத் தரும் என்பதை அறிந்ததால்தான் கொடுத்திருக்கிருர்கள்!! அவசர அவசர மாகச் சேர்த்து சில மணி நேரத்துக்குள், வழங்கியிருக்கிருர்கள்.

'இன்கம்டாக்ஸ்' ஆபீசர் — கலெக்டர்—போலீஸ் அதிகாரி—சர்க்காரின் தூதர்கள்—தொழிலாளர் தலைவர்கள் தேசியத் தொண்டர்கள், இவர்கள் அனைவருக்கும் வீசப்பட்ட 'வலை' யென்றே, அவர்கள் எண்ணுவார்கள்.

*

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காந்தியாரது 'சபர்மதி' ஆசிரமத்துக்குச் சென்றிருந்தபோது, இன்று 'லட்சம்' வழங்கும் இதே ஆலையரசர்களின் இனத்தைப்பற்றி அந்த ஆசிரமத்துப் பொறுப்பாளர், கண்ணீர் தேங்க ஒரு விபரம் தந்தார். ஒரு முறை, ஆமதாபாத் நகரில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் உத்தமர் காந்தியார் செப்பினுராம் — "பொதுமக்களே! அடுத்த முறை நான் இங்கே வரும் போது இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வாங்கிய வனுகவே, வருவேன். வாங்காமல், திரும்பேன்!!," என்பதாக. செப்பியது போல, நடைபெறவில்லை-சுயராஜ்யம் என்ன கடைச்சரக்கா! கேட்டதும் வாங்கி வருவதற்கு!! அதனுல், காந்தியார், தன்னுயை சபர்மதி ஆசிரமத்துக்குச்செல்ல, அகமதாபாத் ரயில் வே நிலையத்தில் வந்திறங்கினுராம். அந்த நேரம், ஆலைப்பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று, நாடெங்கும் காந்தியார் சொல்லிக் கொண்டிருந்த நேரம். ஆமதாபாத் ஆலையரசர்கள் ஒன்று திரண்டு, காந்தியார் இறங்கியதும், கூச்சல் போட்டனராம்—"சுயராஜ்யம் வாங்கிக் கொண்டு வருவதாகச் சொன்னீரே. எங்கே சுயராஜ்யம்? அதை வாங்காமல்,ஏன் இங்கு திரும்பி வந்தீர்?", என்பதாக. உத்தமரும், ஒரு வார்த்தை சொல்லாமல், அடுத்த ரயிலிலேயே அந்த இடத்திலிறங்காமல் கிளம்பிச் சென்றுராம்! பிறகு சுயராஜ்யம் வந்தும் கூட, பாபு இந்த ஆசிரமத்துக்கு வரவில்லை," என்று, வருத்தம் தோய்ந்த குரலில், கூறினுர் —அந்தப் பொறுப்பாளர்.

•

அதே ஆலையரசர்களின் கூட்டம், இன்று, ஆயிரக்கணக்கில் அள்ளி வழங்குகிறது! அதனைப்பெற, முதலமைச்சரும்,துணை அமைச்சரும் செல்லுகிருர்கள்!!

நாட்டில் நானுவித வேலைகளுக்குப் பணம் தேவைப்படுகிறது.

அந்தப் பணம், சீமான்களின் இரும்புப் பெட்டியில் பதுங்கிக்கிடப்பதும், பலருக்குத் தெரிகிறது.

அதில், சில லட்சங்களை வெளிக் கொணர்ந்து, செய்ய வேண்டிய நற்பணிகளைச் செய்யலாம்—காமராஜரும், சகாக்களும்! சிலமணிநேரத்தில், லட்சத்தைப் பிடித்திருப்பதால், அந்தக் காரியமும் சாத்யமென்றே, தெரிகிறது. ஆனுல், தலைவர்கள், அதற்காகச் சிரத்தையெடுத்துக் கொள்ளவில்லை! காங்கிரஸ் மாநாட்டை நடத்தப் பறந்து சென்று 'பணம்' வசூலித்துக் கொண்டுவருகின்றனர்!!

"இதைப் போன்ற நாடகத்தை உலகின் எந்தப் பாகத்திலும் காணமுடியாது."

"ஆட்சியாளரே, பணம் வசூல் செய்வதென்பது, ஆட்சிக்கும் நாட்டிற்கும் உகந்தது அல்ல"

"இந்த இந்திய நாட்டில் தான் இப்படியெல்லாம்!"

என்று, டாக்டர் அம்படி கிருஷ்ண மேனன், என்பார் வேதனையோடு தீட்டியிருக்கிருர், ஒரு கடிதம்! ஆலையரசர்களிடம் பணவசூல் செய்த செய்தியைப் பிரசுரிக்கும் 'இந்து' ஏடு, இந்தக் கடிதத்தையும் வெளியிட்டிருக்கிறது!!

மேனன்மட்டுமல்ல, நாட்டின் நல்வாழ்வில் அக்கரை கொண்ட ஒவ்வொருவரும் இதைப்பற்றி எண்ணத்தான் செய்வர். கட்சி மாநாட்டிற்கு ஆட்சித் தலைவர்களே வசூலுக்குச் சென்றுல், என்னென்ன இலாபத்தை எதிர்பார்த்து எவரெவர் பணம் கொடுப்பரோ!

வேதனையுடன் கடிதம் தீட்டியிருக்கும் மேனன்-வேறோர் தகவலையும் தருகிருர், இதுபோன்ற நிகழ்ச்சிகள் எங்கும் நடைபெற்றதில்லை. நடைபெற்றதாகச் சந்தேகப்பட்டாலும் அந்த நாட்டுச் சட்டசபையினர் இலேசில்விட்டதில்லை என்பதை விளக்க.

லாயிட் ஜார்ஜ் எனும் பெயர் பெற்றவர், பிரிட்டனின் பிரதமராக இருந்த நேரம். தன்னுடைய கட்சிக்காக பண வசூல் செய்யவும் அவர் புறப்படவில்லை, ஆனல், அப்படியொரு புகார் கிளம்பிற்று, உடனே, பிரிட்டிஷ் பாராளு மன்றம், அது உண்மை தானு என்றறிய ஒரு கமிட்டியைப் போட்டு விசாரணை செய்தது.

இந்த விபரத்தைத் தருகிருர், மேனன். ஐயம் கிளம்பியதற்கே இப்படி! அங்கே பிரிட்டனில்!! இங்கோ பட்டப்பகலில், பலரறிய, விருந்தும் பூமாலையும், அதனுடன் 'செக்'கும் வாங்கிக்கொண்டு வருகிருர், முதலமைச்சர்!! ஏடுகள், பெருமிதத்தோடு பிரசுரிக்கின்றன, செய்திகளை.

தன்னுடைய ஆட்சியைப்பற்றி சிறு சொல் வீசியது கேட்டு சினந்து எழுந்தானும் — பாண்டிய மன்னன், இலக்கியம் கூறுகிறது, பண்டைக்கால ஆட்சியின் மாண்பை விளக்குவது போல.

அநீதி, அக்கிரமம் — என்று நாடு கூறுகிறது, ஆட்சி அழகைக் காட்டி, கட்சிக்குக் காசு தேடும் காங்கிரஸ் தலைவர்களின் போக்கு கண்டு.

அன்பர் மேனன்—அகில உலகத்திலும் யாரும் இப்படிச் செய்ததில்லை—அப்படி நடைபெற்றதாக ஐயம் ஏற்பட்டாலே இலேசில்விட்டதில்லை—என்று விபரம் தருகிருர் வேதனையுடன்.

உதாரணமாக பிரிட்டனை அழைக்கிருர்.

சீனு சென்று திரும்பிய நேருவோ "எமது இந்தியாவின் ஜனநாயகம், மேற்கத்திய நாடுகளைப்போல சக்தியும் பண்பும் நிறைந்தது" என்று கர்ஜித்திருக்கிருர்.

சென்னை மாநில முதலமைச்சரும், நிதிஅமைச்சருமோ, சீமான்களை நாடி 'செக்' பெற்றுக்கொண்டு பறந்து வருகிருர்கள்.

அந்த 'செக்', காங்கிரஸ் கட்சி மாநாடாக மாறப்போகிறது. அந்த மாநாட்டிலே சங்கநாதமும், சிம்மக் கர்ஜனையும் எழும்பக்கூடும். ஆலையாசர்கள் கொட்டித் தந்த 'லட்சத்துக்கு' வியர்வையையும் இரத்தத்தையும் தத்தம் செய்த எண்ணற்ற தொழிலாளர்கள் பெருமூச்சுவிடாமலா இருப்பார்கள்.

ஒருபோது, காந்தியாரையே திருப்பி அனுப்பிய 'பரம்பரை', காசு தருகிறது! அதைப் பெரிதெனமதித்து பறந்துபோய் வாங்கி வருகிருர் — ஒரு நாட்டின் முதலமைச்சர் என்பதையும் மறந்து! இந்த நிலையில் காங்கிரஸ் கட்சி, மக்களின் கட்சியாம்—காங்கிரஸ் ஆட்சி, பட்சபாதம் அற்ற ஆட்சியாம்!!

மாற்ருரும் போற்ற வாழ்ந்த பாண்டியப் பெரு வழுதியின் பூமி எங்கே! உற்ருரே, சலித்துக் கொள்ளும் வகையில், காலச்சக்கரத்தை உருட்டிச் செல்லும் இவர்கள், எங்கே!!

மக்களிடம் 'லஞ்சம்' வாங்கிஞரா?— என்று வெகுண்டெழுந்து விசாரணை செய்த, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஜனநாயகம், எங்கே? நேரில் சென்று பணம் பெற்று வந்தும், சிறு கண்டனமும் தெரிவிக்காத தேசத் தலைவர்கள் கொண்ட இந்த நாடு எங்கே!!

இந்த லட்சணத்தில், இது மக்கள் ஆட்சியாம்! உண்மை ஜனநாயகம் உலவும் உத்தம பூமியாம்!!

உலகம், நகைக்கும் — கேள்விப்பட்டால்.

★

திருநாள்!

[சு. செல்லியப்பன்]

★

1. பசி நோயால் உடல் மெலிந்து-கால்கள் சோர
பஞ்சடைந்த விழிகள் களை-ஒளியிழக்க
வஞ்சமெனும் கொடியபிணி-அவனை வாட்ட
வயிற்றுக் கொரு பிடிசோறு-தேடச் சென்றான்

2. கதிரவனும் காலையில் தான்-வருவே னென்று
கனிந்ததன் செந்நிறக் கதிரைக்-காட்டிக் கொண்டு
குளிர்ந்த தலை நிமிராமல்-குதித்துவிட்டான்
குவிந்த தெங்கும் காரிருளாய்-அந்த காரம்

3. மேற்புரத்தில் மேள ஒலி-தொடர்ந்து பின்னே
மெய்யுருகித் தரிசிக்கும்-பக்தர் கோஷம்
ஆர்ப்பரித்து ஆகாய வீதி-செல்லும்
அழகுதரும் பல்வாணக்-காட்சி யங்கே!

4. மரத்திழைத்த கொத்துச் சரம்-கழுத்தில் மின்ன
மேனி யெங்கும் பொன்மயமாய்-விளங்கும் அம்மை
பட்டுடுத்தி அய்யன் பக்கம்-அமர்ந்திருக்க
பவனி விழா ஆரம்ப-மாயிற்றங்கே

5. வீதி யெங்கும் பவனி விழா-காண மாந்தர்
விழி நோக வழி பார்த்துக்-காத்திருக்க
நாதியற்ற ஏழை இந்தக் - காட்சிகண்டு
நலிவடைந்த உள்ளத்துள்-குமுறுகின்றான்

6. அழகு நிறை மணிமகுடம்-மரத்தும் பொன்னும்
அறுசுவை போடுண்டி, பொங்கல்-பஞ்சா மிர்தம்
கிழமை தோறும் கடவுளுக்கு-பாட்டாளிக்கோ
கிழிந்த கந்தல் துணியில்லை-உணவுமில்லை

7. உழுகின்றான், நிலம் விதைத்து-நீரைப்பாய்ச்சி
உழைக்கின்றான் பகலிரவாய்-பலனைக்கண்டு
அழுகின்றான் விவசாயி - அந்தோ பாவம்
அழிகின்றான் சோறின்றி இந்த - நாட்டில்!

8. நெய்கின்றான் நெய்த துணி - தனை யெடுத்து
நெடு வீதி கடை களெலாம் - சுற்றிப்பார்த்து
வைகின்றான் தன்வாழ்வை; - இந்த நாட்டை
வளமாக்கும் தொழிலாளர் - வாழ்வ தென்றோ?

9. உழைப்பாளி தனை மதித்து-உலுத்தச் செய்கை
உதவாது என ஒழித்து - பொது நோக்கோடு
சளைக்காமல் தீட்ட வேண்டும்-புரட்சித் திட்டம்
சமதரும மணம் வீசும் - திருநாளன்றோ!

[கைத்தறி]

★ இலங்கையில் நெடுஞ்செழியன் ★

திராவிடத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இலங்கை இடையிடையே ஏற்பட்ட கடல் கோளினால் தனி நாடாக அமைந்தது. இவ்விரு நாடுகளுக்குமிடையே இப்பொழுது ஆட்சிவேறுபாடு இருந்தாலும் பண்பாடு, மொழி, கலை முதலியவற்றில் தென்னாட்டுக்கும் இதர நாடுகளுக்கும் இடையேயிருக்கும் உறவைவிட தென்னாட்டுக்கும் இலங்கைக்குமிடையே இருக்கும் உறவு மிக மிக அதிகம். அரசியலைப் பொறுத்தவரை இரு நாடுகளுக்குமிடையே குறைபாடுகளிருந்தபோதிலும் அன்புப் பாலத்தை ஏற்படுத்த இங்குள்ள தோழர்கள் பாடுபடுகிறார்கள். இங்குள்ள அரசியல் எங்களுக்கு முற்றுகப் புரியாது. எங்களுடைய அரசியல் இங்குள்ள தோழர்களுக்கும் அப்படியே. இங்கு வந்து குடிபதியாயிருக்கும் நமது தோழர்கள் இலங்கையில் வாழ்வோருக்கு உணவு, உடை, வாழும் வகை, அடிப்படை உரிமை முதலியவைகளைப் பெற்றுத்தர செயலாற்றும் எந்த அரசியல் கட்சியோடும் தொடர்பு வைக்கலாம். இதனால் வளம் பெருகும். சக்திக்கு ஏற்ற உழைப்பு—தேவைக்கு ஏற்ற வசதி என்ற அளவுக்கு சட்டம் திருந்தி எல்லோரும் இன்புற்று வாழும்நிலை ஏற்பட வேண்டும்.

மக்களுக்கு இன்றியமையாத பெரிய தொழில்களையெல்லாம் அரசாங்கம் கையேற்கவேண்டும். இதர தொழில்களை கூட்டுறவு முறையில் வளர்க்க வேண்டுமென்பதுதான் நமது கொள்கை. சக்திக்கேற்றபடி உழைத்து பெறும் வசதிகளை தேவைக்கேற்றபடி பெற்றுக் கொள்ள வேண்டும் இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இன்றியமையாத தொழில்களை தனிப்பட்ட முதலாளிகளின் கையிலே விடாமல் அரசாங்கம் கையேற்று நடத்தும் பொருளாதாரத் திட்டம் அமைய வேண்டும் என்றுதான் கூறிவருகிறோம்.

இந்தியா என்ற பெயர் வெள்ளைக்காரர் வந்த பிறகுதான் ஏற்பட்டது. முந்திய பெயர் இந்தியாவென்பதல்ல. வெள்ளைக்காரன் மக்களை துப்பாக்கி முனைமூலம் அடக்கியாளத் தொடங்கிய பின்தான் இந்தியா ஒன்றானது. திராவிடநாடு கேட்பது இந்தியாவை துண்டாடுவது என்று பொருளல்ல. முன்பு துண்டு துண்டுகளாக இருந்த இந்தியாவில் எங்கள்பகுதியை தா என்பதுதான். இவ்விதம் நாம் கேட்பதற்கு காரணம் மிக மிக ஏராளம். ஏழேமுக்கால் கோடி மக்கள் கொண்ட பகுதியைத்தான் நாம் கேட்கிறோம். உலகில் போப் அரசர் இருக்கும் 'வத்திக்கான்' தனிநாடு. அங்கு ஜனத்தொகை ஆக 1000 பேர் தான். ஆனால் தமிழ் நாட்டில் மாத்திரம் மக்கள் தொகை இரண்டரை கோடி. துறைமுகமெதுவும் இல்லாத லக்ஸம்பர்க்கின் குடிசனத்தொகை 3 லட்சம். இப்படி திராவிட நாட்டிலும் பார்க்க குடிசனத்தொகை குறைவாகவுடைய சிறிய நாடுகள் பல தனி நாடுகளாக விளங்குகின்றன. திராவிட நாட்டில் அனேக துறைமுகங்கள் இருக்கின்றன. ஏற்றுமதி இறக்குமதி வரி சென்னையில் ஒரு ஆண்டில் 193 கோடி ரூபாய். ஆனால் இப்பணம் நேரே டில்லியில் சிந்தாமணி தேஷ்முக்கின் கஜானாவுக்குப் போய்விடுகிறது. இவ்விதம் திராவிடநாட்டில் கிடைக்கும் ஏராளமான வருமானம் இங்கு தங்காமல் டில்லிக்குப் போய்விடுகின்றன. இவ்வளவு பணத்தையும் கொடுத்துவிட்டு வாழும் காரணத்தினாலேதான் தென்னாடு வாழமுடியாது வறுமையால் உழல்கிறது. வாழ வழியற்று மக்களை வெளியே அனுப்பி அவதிப்படுகிற நிலையில் இருக்கிறோம்.

இந்தியசர்க்காரால் செய்யப்படும் புனருத்தாரணத் திட்டத்துக்கு தென்னாட்டில் செலவு செய்யப்படும் கூடியதொகை 9 கோடிரூபாய்தான் ஆனால் வடக்கே ஒரு திட்டத்துக்கு மட்டும் 140 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இதிலிருந்து தெரிகிறது வடநாட்டுடன் தென்னாடு சேர்ந்திருப்பது லாபமா, நஷ்டமா என்று? சுதந்திர, சோஷலிஸ கூட்டாட்சி மலர்ந்தாற்றான் நமது தேவைகள் பூர்த்தியாகும். திராவிடத்திலுள்ள 7 கோடிக்குமேற்பட்ட மக்களில் தமிழர் இரண்டரை கோடி. தெலுங்கர் 3-கோடி. கன்னடியர் ஒன்றேகால் கோடி. கேரளர் ஒரு கோடி. தமிழருக்கும் இவர்களுக்குமிடையேயிருக்கும் ஒற்றுமை மிக மிக அதிகம்.

உலக நாடுகள் வாழ்வதற்கு எவ்வளவு காரணமுண்டோ அதே யளவு காரணங்கள் திராவிடம் பிரிவதற்கும் உண்டு.

நாம் நமது கருத்துக்களைச் சொல்லும்போது நாம் கடவுள், மதம், ஜாதி இல்லை என்கிறவர்களென சிலர் கூறுகிறார்கள். சீர்திருத்தம் செய்ய வந்தவர்களுக்கு இதுபோன்ற நிலை ஏற்படத்தான் செய்தது. இயேசு, முகமது, புத்தர் முதலியோர் தமது கருத்தைச் சொன்னபோது வாழ்த்தியா வரவேற்றனர்? சும்மாவாவிட்டார்கள்? மதத் தலைவர்களே இத்தகைய தொல்லைகளை அனுபவித்திருக்கிறார்களென்றால் சாமான்யமானவர்களாகிய நாம் எம்மாத்திரம்?

நாம் முன் சொன்ன பல கருத்துக்கள் இன்று நடைமுறையில் அனுஷ்டிக்கப்படுகிறது. மதத்துக்கு விரோதமாக இருக்க வேண்டுமென்று நாம் சொல்லவில்லை. ஆனால் சொல்பவற்றை மதம் விரோதமாகக் கருதுகிறது. நாம் கடவுளுக்கோ, பார்ப்பனர்களுக்கோ விரோதிகளல்ல. தி. மு. கவில் 700-க்கு மேற்பட்ட பார்ப்பனர்கள் உண்டு. கடவுளுக்கும் நமக்கும் எவ்வித தகராறும் கிடையாது. கடவுளை அருவசியமாக்கச் சிக்கிழுப்பதையே நாம் கண்டிக்கிறோம்.

புனிதமாகப் போற்ற வேண்டிய கடவுள் தத்துவம் இன்று கேலிக் கூத்தாக்கப்பட்டிருக்கிறது. புராணம் இதிகாசம் என்ற பெயரால் கடவுளைக் கேலி செய்வதைத்தான் பக்தி என்று ஆஸ்திகர்கள் இன்று தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியிலிருந்து வரும் விநாயகப் படத்தை வீட்டிற்குள் வைத்து அதன் முன்னால் மணிக்கணக்கில் தியானத்தில் உட்கார்ந்து முணு முணுத்துவிட்டு வெளியே வரும் முதலாளி எதிர் கடையில் உள்ள விநாயகர் மார்க் சுருட்டை வாங்கி பற்றவைத்துக் கொள்கிறார். அந்த சுருட்டிலும் அவர் குறிப்பிட்ட விநாயகரின் சிறிய சைஸ் பிளாக் அச்சிடப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்பவர் ஆஸ்திகராம். சுருட்டு லேபல்களுக்கு கடவுள் பெயரும் படமும் போடலாமா என்று கேட்கும் நாம் நாஸ்திகர்களாம்.

நமக்கும் கடவுளுக்கும் எவ்வித

(12-ம் பக்கம் பார்க்க)

27. மத்திய சிறையில்!

"இப்பொழுது ஜூரர்கள் தங்கள் அறைக்குச் செல்வார்கள்" என்று கத்தினான் கோர்ட்டு சேவகன்.

கலவுலகத்தில் நடுங்கிய கைகளோடு சுற்றிக்கொண்டிருந்த ஆறுமுகம் மெதுவாக தலையை நிமிர்த்திப் பார்த்தான். எதிர்ப்புறத்தில் அமர்ந்திருந்த எழுவர் எழுந்து ஒருவர்பின் ஒருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர்

நடுவில் படுக்கவைக்கப்பட்டிருந்த பொன்னியின் சவமும் துணியால் மூடப்பட்டது. அப்பொழுது தான் கண்களைத் திறந்து கோர்ட் ஹாலையே சுற்றிப் பார்க்கத் தோன்றியது, அவனுக்கு.

இதற்குள் உள்ளே போன ஜூரிகள் திரும்பவந்தனர். அவர்களில் ஒருவர், ஏதோ ஒரு துண்டு காகிதத்தை மாஜிஸ்ட்ரேட்டிடம் கொண்டுபோய்க் கொடுத்தார். மாஜிஸ்ட்ரேட் அதைப் பிரித்துப் பார்த்து விட்டு, கீழே அமர்ந்திருந்த குமாஸ்தாவிடம் நீட்டினார்.

கண்ணாடியை சரி செய்து கொண்டு அந்தக் காகிதத்தில் எழுதியிருந்ததைப் படிக்க ஆரம்பித்தார், குமாஸ்தா.

ஆறுமுகத்திற்கு அரைகுறையாகத்தான் காதில் விழுந்தது, இருந்தாலும் பரவாயில்லை; அதுவே போதும்.

"......இப்படிப்பட்ட அருங்குணவான் உத்தமனாதரிடமிருந்து சில நூறு ரூபாய் நோட்டுகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செய்யப்பட்ட முயற்சி, முடிவில் கொலையாகி இருக்கிறது. இதற்கு முழுப் பொறுப்பாளி இந்த ஆறுமுகம்தான் என்பதை, மனமார இங்கு கூறிய சாட்சியங்களிலிருந்து நம்புகிறோம். கொன்றதோடல்லாமல், பிணத்தை எடுத்து கண்காணாத இடத்தில் புதைத்து, விட்டோம் என்ற எண்ணத்தில் சம்பந்தப்படாதவர்கள் மீது வீண்பழி சுமத்தியும், இவன் சர்க்காருக்கும் மக்களுக்கும் செய்திருக்கும் துரோகத்தை எங்களால் தாங்கமுடியவில்லை. இவனுடைய வழக்கு விவரம் செஷன்ஸில், மேல் கோர்ட்டில் பூராவும் விசாரிக்கப்பட்டு, தகுந்த தண்டனை தரப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறோம்" என்று கூறியிருந்தனர், ஜூரர்கள். மாஜிஸ்ட்ரேட் கையெழுத்துப் போட்டார். அவ்வளவு தான். கல கலவென்று கோர்ட்டு கலைய ஆரம்பித்தது.

"இவனுக்கு வேறு ஒரு கோர்ட்டா?"

"இங்கேயே தூக்கு மாட்டின, என்னவாம்"

"சட்டம் பாரு; இந்த மாதிரி கொலைகாரப் பசங்களைகூட நாள் தள்ள விடுது!"

இதுவும் இன்னும் ஏராளமாகவும் பேசிக்கொண்டே போயினர், மக்கள்.

அவர்கள் போட்ட கூச்சல் அவனை அப்படியே நசுக்கியது.

கையில் விலங்குகளை எடுத்துக் கொண்டு இரு போலிஸ்காரர்கள் வந்தனர்.

நெடுமாறனும் எழுந்து அவனருகில் வந்தார்.

"ஆறுமுகம்! சென்னை மத்திய சிறைக்கு உன்னை எடுத்துச்செல்கிறார்கள். நானே அங்கு வந்து சந்திக்கிறேன். தைரியமாக அங்கு போய் இரு, ஆறுமுகம்"

ஆறுமுகம் பேசாமலிருந்தான். நெடுமாறன் தன் பேப்பர்களை எடுத்து தோல் பையில் திணித்த வண்ணம், "நான் வருகிறேன், ஆறுமுகம்!" என்று கூறிக்கொண்டே போனார். நல்லமுத்து அவரைப் பின் தொடர்ந்தான்.

இரு போலிஸ்காரனில் ஒருவன், ஆறுமுகத்தின் கையையும், இன்னொரு போலிஸ்காரனின் கையையும் சேர்த்து விலங்கு மாட்டினான்.

முன்னால் இரு போலிஸ்காரர்கள் அவன் வெளியேற வழிசெய்து கொடுக்க பின்னால் ஒரு போலிஸ் துணையோடு வெளியே அழைத்து வரப்பட்டான் ஆறுமுகம்.

அவனுடைய முகத்தின் கோடியைக் காண ஆயிரக் கணக்கானவர் கூடியிருந்தனர் வெளியில். சென்னையில் ஆறுமுகம் வகையைச்சேர்ந்தவர்களுக்குக் குறைவா என்ன?

ஆறுமுகம் லாரியில் ஏற்றப்படுவதைக் கண்டவுடன், அந்த ரசிகர்கள் அடித்த சீட்டி, விசில் வானளாவியது. ஆறுமுகம் மலைத்துத் திரும்பினான். என்ன ஆச்சரியம்! அவனுடைய உயிரை முடிக்கும் திட்டம்போட அந்தளவு சென்னை வாசிகளா வரவேண்டும்? ஏதோ விழா மாதிரி அல்லவா இருக்கிறது! அப்படியே பயந்து சட்டென்று லாரிக்குள் ஓடி போலிஸ்காரர்களுக்கிடையில் உட்கார்ந்து கொண்டான்.

'ஓ' என்று கூச்சல் வெளியே, "ஆறுமுகம்!" "ஆறுமுகம்!!" என்று சல சலவென்று எல்லோரும் போடும் காட்டுக் கத்தல்.

லாரி நகர்ந்தது. கூச்சல் அதிகமாகியது! ஓடியது. அவனால் சகிக்க முடியவில்லை. அப்படியே படுத்து விட்டான்!

*

"எழுந்திருப்பா, நாழியாகி விட்டது. எவ்வளவு நாழி தூங்கிறது?"

என்று யாரோ தன்னைத் தட்டுவதைக் கேட்டு விழித்துப் பார்த்தான் ஆறுமுகம்.

தான் ஒரு சிறு அறையில் பூட்டப்பட்டிருப்பதையும், முன்தினம் மாலை தன்னை இந்த மத்தியசிறைக்குள் அழைத்து வந்ததையும், பின்னர் தன்னை சர்வாங்க பரிசோதனை செய்து, புத்திமதிகள் கூறி இந்த அறைக்குள் கொண்டு வந்து தள்ளியதையும் கூட, அவனால் முழுவதும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

பொன்னியின் பிணம் சிரித்த சிரிப்பு அவன் மூளையை இன்னும் தெளிவாக்கவில்லை.

அதோடு கோர்ட்டு தீர்ப்புந்தான் நிச்சயமாகிவிட்டது.

இனி என்னிப்படி வளர்த்துகிறார்கள்?

அவனுக்கே எரிச்சலாக இருந்தது.

வேகமாக எழுந்து கம்பிகளை வந்து பிடித்தான்.

கையில் ஒரு பெரும் பையை நீட்டி "இதை உனக்கு அனுப்பி இருக்கிறார், உன் வக்கீல், நெடுமாறன்!" என்றான் சிறைக் காவலாளி.

ஆறுமுகத்திற்கு வியப்புத் தோன்றியது. திரும்பவும் அவனையே முறைத்துப் பார்த்தான்.

"அட, என்னப்பா அப்படி பார்க்கிறே. இந்தா, இதைப்பிடி. இன்னும் அரை மணியில் வருகிறாராம். வரும்போது, டிரஸ் கொண்டு வருகிறேன் என்று சொல்லச் சொன்னார்!" என்றான்.

ஆறுமுகம் பேசாமல் வாங்கி பையைப் பிரித்தான். ஆப்பிளும் ஆரஞ்சும் இருந்தன. ஆப்பிள் ஒன்றை எடுத்து வார்டரிடம் நீட்டினான்.

வேண்டாமென்று தலையை யாட்டினான், அவன்.

அப்பொழுதுதான் அவன் கக்கத்திலிருந்த தினமித்திரனைப் பார்த்தான், ஆறுமுகம்.

"கொஞ்சம் தாருமய்யா........" என்று இழுத்தான்.

"ஓ தாராளமாக........" என்று பேப்பரைக் கொடுத்தான், வார்டர். ஆறுமுகம் உலகத்தையே மறந்து உடனே தன் வழக்கைப் படிக்க ஆரம்பித்தான்.

"உத்தமநாதரைக் கொன்றது நான் தான்!"—ஆறுமுகத்தின் ஒப்பம்!

அதை மறைக்கவே பொன்னியும் கொலை செய்யப்பட்டாளாம்.

இது கொலை செய்தவன் இன்று மத்திய சிறையில்.

இன்னும் ஒரு வாரத்தில் உயர் நீதி மன்றத்தில் வழக்கு துவங்கும்!!

இந்தத் தலைப்புகளே போதும் ஆறுமுகத்திற்கு. இன்னும் கீழே வேறு படிக்க ஆரம்பித்தான்.

"..........இப்படிப்பட்ட கோரக் கொலை செய்தவன் தப்பிப்பது குறித்து விவாதமில்லை........நிச்சயமாக மரண தண்டனை........எப்படி......?.......இதைப்போல் இன்னும் எத்தனை குற்றங்களை அவன் செய்திருக்கக்கூடும்........போலிஸ் ஏன் வாளாவிருக்கிறது......?......"

இன்னொரு பக்கத்திலே முன்னேற்ற வக்கீல்கள் சங்கத்தின் உதவி ஆறுமுகத்திற்கு கிடைத்ததைக் கிண்டல் செய்து சர்க்கார் வக்கீல் வாளாடி கிருஷ்ணசாமி பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி போடப்பட்டிருந்தது.

"நெடுமாறன் போன்ற முன்னேற்றவாதிகள் இந்த வழக்கை எடுத்து நடத்துவதை சுட்டிக் காண்பித்தபோது, "இதைவிட மட்டமான காரியத்தையும் அவர்கள் செய்வார்கள், எல்லாம்." என்றார் கிருஷ்ணசாமி. அப்படியானால் இந்த விளம்பரம் அடுத்தத் தேர்தலில் தேசியக் கட்சியை பாதிக்குமா என்று கேட்டதற்கு, "பூ..." என்று சிரித்தார், சர்க்கார் வக்கீல். என்ன நடந்தாலும், ஆறுமுகத்தை யாரும் காப்பாற்ற முடியாது என்பதில் மாத்திரம் நிச்சயமாக இருந்தார், அவர்."

சட்டென்று பத்திரிகையை மூடினான் ஆறுமுகம். இதற்கு மேல் பத்திரிகையைத் திருப்பி திருப்பிப் படிப்பதில் என்ன இலாபம்?

"இனி அவனை யாரும் நிச்சயமாகக் காப்பாற்ற முடியாது?"

திரும்பத் திரும்ப அவன் மனதில் எதிரொலித்தன.

சாவுக்கு நேரம் நெருங்க, நெருங்க, சாவைப்பற்றிய எண்ணமும் அதிகமாகிக்கொண்டே போனது.

"எது வந்திடினும் அஞ்சேன்" என்று முழுதைரியத்தோடு ஆறுமுகத்தால் ஒரு நாளும் இருக்க முடியவில்லை. இந்த வழக்கு ஆரம்பித்த பின் அவன் மனம் பட்டபாடு, இதற்கு முன் பட்டதில்லை. ஒவ்வொரு நிமிடமும் உலகத்தில் போராடி வாழ்ந்தான் வேண்டுமென்று எண்ணம் வரும். அடுத்த நிமிடமே அந்த உறுதியை அடித்துச் செல்லும், 'பயம்' எனும் பயங்கரக் குமுறல். இவைகளைத் தடுக்க அவன் எவ்வளவோ முயன்றான். படித்தவர்கள், நிதானபுத்தி படைத்தவர்கள், நியாயத்திற்கு உழைப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் இம்மாதிரி மனச் சஞ்சலங்கள் ஏற்படாது என்றும், தன்னைப் போன்ற அறிவிலிகளுக்குத் தான் வருமென்றும் கூட படித்திருக்கிறான். ஆகவே தான் தன் வாழ்க்கையைத் துண்டு துண்டாக்கி அலசி, ஆராய்ந்து பார்த்தான். அங்கே மிஞ்சி நின்றது "தூக்கு மேடை" தான். இந்தப் பயணத்தை தடுத்து விடுவேன் என்று கூறிக் கொண்டு வருகிறார், நெடுமாறன். நடக்கிற காரியமா? உலகத்துக்கு தன் மேலும், அவர் மேலும் இருக்கும் வெறுப்பு அதிகமாவதைத் தவிர வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

இந்த நேரத்திலே, "என்னப்பா ஒரே யோசனை; வா, வா; உங்க வக்கீல் வந்திருக்கிறார்" என்று கூறிக் கொண்டே கதவைத் திறந்தான், வார்டர்.

பேசாமல் எழுந்து பின் தொடர்ந்து வெளியே நெடுமாறன் தங்கியிருந்த அறைக்கு வந்தான்.

'எப்படி இருக்கிறாய் ஆறுமுகம்' என்று கூறிக்கொண்டு அவனை வரவேற்றார், நெடுமாறன்.

பேசாமல் நின்றான், ஆறுமுகம். நெடுமாறனே, அருகிலிருந்த பையை எடுத்து, "இதோ, இதில் வேண்டிய துணிகள் வைத்திருக்கிறேன். இன்னும் அரைமணியில் உனக்கு வரும்"

"தாங்க்ஸ் சார்"

"பரவாயில்லை; இரவு நன்றாகத் தூங்கினியா?"

"சுமாராக......"

"ஆறுமுகம்...! இன்று உன் மனதிலிருப்பவை பூராவையும் என்னிடம் கூறிவிடவேண்டும், தெரியுமா?"

"சார்...சார்.....ஒன்றும் வேண்டாம், சார். நான் தான் சரியா மாட்டிக்கிட்டேனே; அப்புறமா..."

நெடுமாறன் அப்படியே திகைத்துவிட்டார்.

ஆறுமுகத்தின் கண்களில் நீர் ததும்பியது,

"அப்படி நீயே முடிவுகட்டிவிட்டாயா?"

"பின்......?"

"ஏன்...? கவர்னரிடம் மன்னிப்பு கோரக்கூடாதா?"

அதைவிட இறக்கலாம்"

"பைத்யம்; அதிலென்ன இழிவு? நீ உயிரோடிருக்கத்தானே ஆசைப்படுகிறாய்!"

"சரி, எப்படியோ போகட்டும்; சர்க்கார் வக்கீல் உன் வாக்குமூலத்தின் நகல் ஒன்றைக் கொடுத்தார்; படித்தேன். அதில் நீ கூறியிருப்பதெல்லாம் உண்மையா?"

"வேறென்ன சொல்வது?"

"அப்படியானால் உத்தமநாதரை கொலைசெய்து புதைத்தது நீயா?"

"நான் தான் என்று ஒப்புக்கொண்டாகவேண்டும்"

"ஏன்...?"

"மேலும் கேட்காதீர்கள். நான் தான் கொலை செய்தேன். இனி என்ன செய்வது?"

"ஏன் செய்தாய்?"

"எனக்குத் தெரியாது"

"முன்பே திட்டம் போட்டிருந்தாயா?"

"ஐயோ! இல்லை"

"இதில் உனக்கு உதவி யார்?"

"யாருமில்லை!"

"இது மாதிரி செய்யவேண்டுமென்று நீண்ட நாட்களாக நீ எண்ணிக்கொண்டிருந்தாயா?"

"இல்லை"

"பின் எப்படி நடந்தது?"

"எப்படியோ நடந்துவிட்டது!"

"உனக்கே வருத்தமும், வெட்கமுமாயில்லை?"

"இப்பொழுது நினைத்துப் பயன் என்ன?"

திடீரென்று நெடுமாறனுடைய தன் உணர்ச்சிகளையெல்லாம் பேசித் தீர்த்துவிட வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டது, ஆறுமுகத்திற்கு. நெடுமாறன் கேட்டதற்கெல்லாம் சளைக்காமல் பதில் கூற ஆரம்பித்தான். நெடுமாறனும் இதுதான் சமயமென்று அவனிடம் கேட்கவேண்டிய கேள்விகள் அத்தனையும் கேட்டுவிட்டார்.

"உத்தமநாதரின் பணத்தைத் திருட நினைத்து, நீ கொலை செய்ததாக, கூறுகிறார்களே, அது தவறுதானே?"

"தவறுதான். ஆனால் இல்லையென்றால் யார் நம்புவார்கள்?"

"பிள்ளை நளினி வீட்டிலிருந்து உயிரோடு பிறப்பட்டு விட்டதால், அவளை கோர்ட்டில் இழுக்கமுடியாது. இழுத்தாலும், அவள் மறுதலித்தால் பக்க சாட்சியம் கிடையாது. எது எப்படியிருப்பினும் பிணமாக இருந்த பிள்ளையை புதைக்கச் சொல்லி உனக்கு யார் சொன்னார்கள்?"

"அதுதானே எனக்கும் தெரியலே? என்னமோ, ஒரே குழப்பம்...... பயம்......"

"சரி. சரி. பயமும் குழப்பமும் வந்தால் சப்தமல்லவா போட்டிருப்பே?"

"இல்லியே. பல தடவைகள் காலை செய்தியில் "பலே செய்தி" காலத்தில் போடும் பல வழக்குகள் தான் அந்த நேரத்திலே ஞாபகம் வந்தது! பின் வேறென்ன செய்வேன்?"

"உன் மூளை எங்கே போச்சு?"

"அதுதானே இன்றைக்கும் யோசிச்சு பார்க்கிறேங்க. படிக்கிறேன், படிக்கிறேன் என்று ஐந்து வயசிலேருந்து கத்தினேங்க, ஆனால் என்னை யாரும் படிக்க வைக்கலேங்களே. காலை செய்தியின், பலே செய்திதான் என் மூளையை இதுவரை விருத்தி செய்து வந்தது."

"அதைப் பார்த்துக்கிட்டு இந்த அரசாங்கமும் உட்கார்ந்துகொண்டிருக்கு. உங்களுக்கு எம். எல். ஏ. க்கள் இருக்கிறார்கள் தெரியுமா?"

"தெரியுமே. தேர்தல் காலத்திலே சேரிக்கு வந்து ஓட்டுப் போடச் சொல்வாங்க. பீடிக்கு காசுக் கொடுப்பாங்க. பின் மறுபடியும் எலெக்ஷன் வர்றப்பதான் வருவாங்க."

"அவர்களிடம் போய் சண்டை போடுவதுதானே?"

"எங்கே போடுவது? அவுங்க டவுனுக்குள்ளே பங்களா கட்டிக்கிட்டு பெரிய ஜாதிக்காரவங்களோடு வாழறாங்க, நாங்கள் குறை சொல்லப் போனாலே அவுங்க பெண்டு, புள்ளைகள் அந்தஸ்தை கெடுத்துட்டோமென்று திட்டுகிறார்கள். யாருகிட்டேபோய் குறை சொல்றது?"

நெடுமாறன் அப்படியே திகைத்துவிட்டார். ஆறுமுகம் கூட இவ்வளவு விஷயங்களை உள்ளடக்கி நிற்பான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. மேலும் அவனைக் கேட்டார்.

"ஆறுமுகம்! சிறு வயதில் நீ ஏதாவது விரும்பியது உண்டா?"

"ஆமாம், சார். என் 14-வது வயதில் சண்டையில் சேர்ந்து உடைகள் அணிந்து சோல்ஜராகனும் என்று நினைத்தேன். நான் வயது வந்து போய் சேருவதற்குள் சண்டை முடிந்து விட்டது!

பழையபடி கந்தலோடு, கார் ஷெட்டுகளில் பொறுக்கிக் கொண்டிருந்தேன். மோட்டார் மெக்கானிக் வேலைக்கு இனாமாக சோறு போட்டு சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். போனால் படிப்பு போதாது என்று கூறிவிட்டார்கள்.

படிக்கலாமென்றாலோ, பணம் இல்லை. சாப்பாட்டுக்கே லாட்டரி போடவேண்டியிருந்தது!

இதெல்லாம் பேசி என்ன பயன்? எல்லாம் முடிந்து விட்டது. என் அருமை பொன்னியையும் கூட கொன்று விட்டேன், இனி என்ன இருக்கிறது?"

"ஹீம்...! பொன்னியை ஏன் கொன்றாய், ஆறுமுகம்?"

"ஏனா.........? எதற்கும் ஏன் செய்தேன் என்று எனக்குத் தெரியாது!"

"இல்லை. இப்பொழுது நீயே தெரிந்து கொள்ளப் போகிறாய்? உத்தமநாதரை ஏன் புதைத்தாய்?

"..............."

"அவர் சவ உடலை யாராவது பார்த்து உன்மேல் குற்றம் சுமத்திவிடப் போகிறார்கள் என்ற பயத்தில் ....இல்லையா?"

"ஆம், சார்!"

"அதேமாதிரி கடைசி நேரத்திலும் பொன்னி ஏதாவது உளறி உன் உயிருக்கு ஆபத்தை தருவிக்கப் போகிறாளென்ற பயத்தில்......"

'ஓரளவு சரிதான் சார். எல்லாம் ஒரே 'பயத்தின்' காரணம்தான்"

"இல்லை; பயம் மாத்திரமில்லை. பயத்திற்கு அடிப்படைக் காரணமான உன் உயிர் உலகத்தில் உலாவவேண்டும் என்ற ஆசையும் தான்"

அப்படியே வெட்கி தலைகுனிந்து கொண்டான், ஆறுமுகம்.

அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, "வாழவேண்டுமென்று நினைப்பது ஜீவராசிகள் ஒவ்வொன்றின் இயற்கை, ஆறுமுகம். ஆகவே, நீ செய்த தவறுகளுக்காக வருந்து. ஆனால், அதைரியப்படாதே. மேற்கொண்டு தவறுகளைச் செய்யாதே. இன்று நாழியாகிவிட்டது. உன் வழக்கு உயர் நீதி மன்றம் ஏற இன்னும் ஒரு வாரமாகும். அதுவரை தினம் உன்னைச் சந்தித்துப் பேசுகிறேன். தைரியமாயிரு" என்று கூறி எழுந்தார், நெடுமாறன். அவர், சிறைவாயிலைத் தாண்டுவதைப் பார்த்துக்கொண்டே, சிந்தனையில் ஆழ்ந்தான், ஆறுமுகம். (தொடரும்)

திராவிடநாடு

காஞ்சி] 14—11—54 [ஞாயிறு

உருப்பட வழியொன்றும் இல்லையே!

★

கொலை!

சிசுக் கொலை!!

தெரிந்து செய்யப்பட்ட கொலை.

சாகடிக்கவேண்டும் என்று, செய்த படுகொலை.

மென்னியைத் திருகிக் கொன்றான்.

மெதுவாக தூக்கி யெடுத்து மடிமீது வைத்துக் கொண்டு, சாகடித்தான்.

*

மாபாவி! மனம் என்ன இரும்பா, கல்லா?

குழந்தையைக் கொன்றானே மே—முர்க்கன்.

அவன் என்ன அரக்கனோ?

படுபாவிப் பயலய்யா, அவன்? போற கதிக்கு நல்ல கதி கிடைக்காது.

சிசுஹத்தி, லேசா, என்ன!!

ரௌரவாதி நரகம்தான் கிடைக்கும்.

*

செய்தியைக் கேள்விப்படும் சிலர்கள் இவ்வண்ணமே, சீறுவர்! "குழந்தையும் தெய்வமும் ஒன்றன்றோ—குலநாசக்காரன்,—கொன்றானே?", என்று சபிப்பர். என்ன மனமய்யா அவனுக்கு.—என்று, ஏசவும் செய்வர்.

இது, அத்தனையும், தனக்குக் கிடைக்குமென்று தெரியாதவனல்ல. எனினும் கொன்றான்.

சிறுத்தொண்டர் போல, எம்பெருமான் திருவடிபெற அல்ல. பாழும் வயிற்றின் பசி தாங்க முடியாமல்.

*

மிகவும் துரதிர்ஷ்டமான வழக்கு, இது.

வேண்டுமென்றே செய்த கொலை அல்ல; விரக்தியின் விளைவு.

ஏழை! என்ன செய்வான்—பாபம்?

எனவே, ஆயுள் தண்டனையைக் குறைத்து சிபாரிசு செய்கிறோம்.

மூன்று ஆண்டு சிறைவாசம் அனுபவித்தால் போதும்.

*

இவ்வண்ணம் அந்தக் கொலைகாரனுக்கு அனுதாபம் காட்டியிருக்கின்றனர், சென்னை உயர் நீதி மன்றத்து நீதிபதிகளான பஷீர் அகமதும், பாலகிருஷ்ண ஐயரும்.

அவன் குற்றத்தை மறுக்கவில்லை—சாட்சிகளும், உண்டு! வழக்கு, சிக்கலில்லாதது. எனினும், நீதிபதிகள், அனுதாபம் காட்டியிருக்கின்றனர்.

அப்போது, அவர்கள் குறிப்பிட்டிருக்கும் வாசகம் இருக்கிறதே அது மிகமிகக் கவனிக்கப்பட வேண்டியது.

கொலை செய்தான்—ஏன்?

"தொடர்ந்து பட்டினி. வேலை யெங்கும் கிடைக்கவில்லை. மனைவியும் மக்களும் ஏங்குவதைக் காணச் சகிக்க முடியவில்லை. எனவே, இந்தக் காரியம் செய்திருக்கிறான். வேண்டுமென்று அவன் 'கொலை செய்யவில்லை. மனவேதனையின் விளைவு"

*

அற மன்றம் கூறுகிறது—அரசியல் வாதிகள் அல்ல!

அனுதாபத்துடன். தெரிவிக்கிறது, இதனை.

குற்றம் சாட்டப்பட்ட மாறன், குனிந்த தலையோடு, சென்றுவிட்டான் சிறைக்கூடம்.

நீதிபதிகள், தமது தீர்ப்பை எழுதிவிட்டனர். ஆனால், ஏழை, குமுறும் அவன் உள்ளத்தை யாரிடம் எழுதிக் காட்டமுடியும்?

"கொன்றேன். என் குழந்தையைக் கொன்றேன். ஏன் பிறந்தாய் செல்வமே—ஆராரோ பாடி, பாலூட்டி, வளர்க்கமுடியாத பாவியின் வயிற்றில் ஏன், பிறந்தாய் நீ? எனக்கும் உன் அம்மாவுக்கும் பிடி சோறு கிடைக்கவில்லை கண்ணே. நீ பேசும் பொற்சித்திரம்போல் என் மடியில் கிடக்கிறாயே? மாபாவிக்கு ஏன் பிறந்தாய், மகளாக; ஓடிடும் நதியோ, ஆடிடும் கிளையோ—எனக்குச் சாந்தி அளித்துவிடுமே, இவ்வுலகத்திலிருந்து. உன்னை என்ன செய்வேன்; எங்கு விட்டுச் செல்வேன், பெற்ற குழந்தையை பெரியதொரு ராணியாக இருந்தும் ஆற்றிலே விட்டாளாம், குந்திதேவி. அந்த மந்திமனம் இல்லையே, எனக்கு. உன்னைப் பார்க்கும்போது இந்த உலகம் ஒரு பூக்காடுபோல தெரிகிறது — உன் குறுநகை, அங்கு வீசும் தென்றலாகத் தென்படுகிறது. உன் அன்னையின் கண்களிலிருந்து வடியும் நீரையும் என் வயிற்றைக் கிள்ளும் பசியையும் காணும்போது, உலகம் பூக்காடாக அல்ல சாக்காட்டுப் பூமியாக வன்றோ, தோன்றுகிறது. கண்ணே, கதறாதே. அழாதே, செல்வமே அழாதே — என்று ஆசை தீர முத்தமிட்டுவிட்டுத் தான், கொன்றேன். ஏன்? **பட்டினியய்யா பட்டினி!** *என் குல விளக்கைத்தானய்யா—பாவி நான் கொன்றேன். காரணம் என்ன தெரியுமா?* **வேலை கிடைக்கவில்லை, எனக்கு!** *குறும்புச் சிரிப்பையும் அரும்புப் பற்களையும் கண்டு ரசிக்கத் தெரியாத மரமல்ல, நான்—மனிதன் தான். எனினும்,கொன்றேன். ஏன்?* **வேதனையப்பா, நான் பட்ட வேதனை!"**

*

கண்ணீர்வழியும்,கேட்போருக்கு! பெற்ற மகளைத் தகப்பன் கொல்லுகிறான்!!

அடிக்கடி இது போல, வழக்கு

கள், வருகின்றன அறமன்றத்துக்கு.

அதுவும், இந்த அழகு பூமியில்தான்! பசி, பஞ்சம், பட்டினி—என்ற காரணத்தால், குழந்தையைக் கொல்லுகின்றனர்!!

கொன்ற மாறன், யாருமல்ல—அவனும், இந்த அகண்டபாரதத்தில் 'பிரஜா உரிமை' பெற்ற நபர்தான்! வாழும் உரிமையில்லாததால், மிருகமாகியிருக்கிறான்!!

இதோ, ஒருவர், பேசுகிறார்—இவரும், அவனைப்போல 'அகண்டபாரதத்தின்', பிரஜைதான்......

சின்னஞ் சிறு குழந்தைகள்!

சிங்கார மலர்களைப் போலத் திகழ்கின்றன.

சிரித்து விளையாடிக் கிடப்பதைக் காணக் கண் கோடி வேண்டும் போலிருந்தது.

அன்னையர், அந்தக் குழந்தைகளை, அள்ளியணைக்கும் காட்சி—அற்புதம்! அற்புதம்!!

"எத்தனைக் குழந்தைகள் அம்மா, உங்களுக்கு?", என்று கேட்டேன் ஒருவரை. "எத்தனையிருந்தாலும், என் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டோ!", என்றார், அவர்.

குழந்தைகளும் கவலையின்றி இருக்கின்றன! பெற்றோரும் ஆனந்தத்தோடு இருக்கின்றனர்!!

குதூகலமாக வர்ணிக்கிறார், இவர்! மாறன் — குழந்தையைக் கொன்றான். இவர், குழந்தைகள் எவ்வளவு ஆனந்தத்தோடு இருக்கின்றன தெரியுமா!—இந்தக் கண்களால் கண்டு வந்தேன்!! என்று, தெரிவிக்கிறார்.

எங்கே, இக்காட்சி?—சீனாவில்! செப்புகிறார், திருமதி இந்திரா நேரு!! குழந்தைகள் அங்கே குமுத மலர் போலக் காட்சி அளிக்கின்றனவாம்—அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோர், 'குழந்தையை வளர்க்க வேண்டுமே' என்ற அச்சம், துக்கம் எதுவுமின்றி ஆனந்தமாக இருக்கின்றனராம்! அங்கே, சீனாவில், இது!! இங்கே, மாறன் பேசுகிறான்—"பாழுங் கடவுள் எனக்கேன், தந்தார் குழந்தையை? பாவி நானே வாழ முடியவில்லையே! இந்தப் பைங்கிளியை எப்படிக் காப்பாற்றப் போகிறேன்?"

சீனாவின் புகழைச் செப்பிடும் தேவி இந்திராவுக்கு—மலர் மாலை; வாழ்த்துக் குவியல்; வரவேற்பு; பாராட்டிதழ்கள்.

மாறன், மூன்று ஆண்டு கடுங்காவல் பெற்று, சிந்திய மூக்கும் அழுத கண்ணுமாக, நீதிபதிகளின் அனுதாபத்தைப் பரிசாகப் பெற்று, நெஞ்சில் நெருப்புடன், நுழைகிறான்—சிறைச்சாலைக்குள்.

கவனமிருக்கட்டும்; தேவி இந்திரா, பிரதமர் நேருவின் புத்திரி, ஏழை, மாறன்—ஒரு, ஏனோ தானோ. எனினும், இருவரும், 'அகண்டபாரதத்தின்' சொந்தப் பிரஜைகள்; ஓட்டுரிமை பெற்ற சுதந்திரப் பிரஜைகள்.

*

அரசியல் மேதைகளும், அரசுத் தூதர்களும் அடிக்கடிச் சென்று வருகின்றனர்—வெளி நாடுகளுக்கு. திரும்பியதும், அங்குகண்ட காட்சிகளை, ஆனந்தத்தோடு அறிவிக்கின்றனர்.

ஆனால், இங்குள்ள ஏழையோ' 'அலையாத இடமில்லை. கேட்காத வீடில்லை. துயரம் தொலையவில்லை. பசி போக்க மார்க்கம் தென்படவில்லை. பாவி, ஏன் பிறந்தேன் உலகில்? என்ன செய்வேன்.,' என்று துயர கீதம் பாடி, பாழுங் கிணற்றையோ, ஒரு முழக்கயிற்றையோ, ஓடும் ஆற்றையோ, தேடுகிறார்கள்—சாக; கொலை செய்ய.

இந்த நிலை, நீடிக்கிறது—நாட்டில்.

இதனை, பிறர், மறுக்கலாம்; ஆனால், அறமன்றங்கள், தெளிவாகத் தெரிவிக்கின்றன. பட்டினியின் விளைவு—வேலையில்லாக் கொடுமையின் காரணம்—என்பதாக.

தேவி இந்திரா வர்ணிக்கும் சீனாவில் வாழும் மனிதர்களுக்கு, புராணங்களில் வர்ணிக்கப்படுவது போல, நாலு கரமும், ஆறு தலைகளும் இல்லை—சராசரி நம்மைப் போலத்தான் இருக்கின்றனர். அவர்கள் தவழ்ந்து வாழும் பூமியில், நெல் மழை பெய்யவில்லை. நினைத்ததையெல்லாம் நீட்டிக்கொண்டு மில்லை, மண். இங்கிருப்பது போன்றுதானிருக்கின்றன, மலைகளும், மாநதிகளும். நஞ்செயும் புஞ்செயும். அங்கே அந்த ஆனந்தத்தைக் கண்டேன் என்கிறார், இந்திரா — அவர் கம்யூனிஸ்டு அல்ல—நேருவின் புதல்வி. இதோ கோர்ட்டில் கதறுகிறானே, ஏழை—அவனும் கம்யூனிஸ்டல்ல — நேருவின் பிரஜை.

*

"நீடிக்கும் இந்த நிலை போக்க—நேருவே—என்ன செய்தீர்?"

"என்ன இப்படிக் கேட்கிறாய்? இதையெல்லாம் போக்கத்தானே முயன்று வருகிறோம்"

"என்ன முயற்சி செய்திருக்கிறீர்கள், இதுவரையில்"

"வெள்ளையனை விரட்டினோம்"

"பழைய பல்லவி அது"

"ஐந்தாண்டுத் திட்டம் போட்டு நிறைவேற்றி வருகிறோம் — ஆறுகள்—பாலங்கள் — அணைக் கட்டுகள் அமைத்து வருகிறோம். இது சாதாரண காரியமா"

கேள்விகளின் விடை, ஐந்தாண்டுத் திட்டத்தில் வந்துமுடியும்!

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின்படி மூன்றரை ஆண்டுகள் ஓடிவிட்டன,

இப்போது, 9—11—54 அன்று, டில்லியில் அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் போடுவதைப்பற்றி மாநில முதலமைச்சர்களும், பண்டித நேருவும் ஆலோசனைகள் செய்திருக்கின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் என்ன?

பதில், நாம் கூறவேண்டியதில்லை. பண்டித நேருவுக்கு சாமரம் வீசி, 'பராக்கு' கூறுவதையே தொழிலாகக்கொண்ட மவுண்ட் ரோடு 'இந்து' ஏடு கூறுகிறது: "என்ன பயன் கிடைத்தது என்பது புரியவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட பணமும் நியாய

காஞ்சியில்

காஞ்சி, இந்திய—சீன நட்புரிமைக் கழகத்தின் சார்பில், கடந்தமாதம் 17, 18, 27, 28, 29, தேதிகளில் இருபிரதமர்கள் சந்திப்பு, சீன நாட்டின் கலை—விஞ்ஞானம், வரலாறு, விவசாயம் பற்றிய படங்கள் கொண்ட கண்காட்சி பச்சைப்பன் கல்லூரியிலும் முத்தியால் ரெட்டியார் சத்திரத்திலும் நடத்தப்பட்டது. மாணவர்களும், பொதுமக்களும் கண்டுகளித்தனர்.

மான வழிகளில் செலவழிந்ததாகத் தெரிய வில்லை"

நியாயமான வழிகளில் செலவழிந்ததாகத் தெரியவில்லையாம்.

இதனைப் பண்டிதரே, ஜாடைமாடையாகத் தெரிவித்துள்ளார்—"அபாரமான சாதனைகளைச் செய்துவிட்டோம் என்று பெருமையடித்துக்கொள்ள முடியாதென்ருலும், கணிசமான காரியங்களைச் சாதித்திருக்கிறோம் என்பதை மறுப்பதற்கில்லை"

1500 கோடி ரூபாய்! அதன் பலன் கணிசமான சாதனை!

இந்த இலட்சணத்தில், இரண்டாவது ஐந்து வருஷத் திட்டமாம்! அதற்கு ஆலோசனை நடந்திருக்கிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அன்பர் நேரு, புது முறுக்கோடு பேசியிருக்கிருர்—இத்துணை நாள் 'ஐஸ்லாந்தி'லிருந்து விட்டு இப்போது இறங்கிவந்தவர் போல, வேதனையும் ஆசையும் அலைமோதப் பேசியிருக்கிருர்–பேச்சின், நடுவில், சினை பற்றிய நினைவும் சிதறியிருக்கிறது.

இந்தியாவிலிருப்போர் எல்லோருக்கும் வேலை கிடைக்கச் செய்யவேண்டுமாம்.

மாறன் போன்ருேர் இருக்கிருர்களே, அவர்களுக்கெல்லாம், வேலை கிடைக்கும்படிச் செய்யவேண்டும், நீங்கள்—என்கிருர்.

நீங்கள் *— என்பது, திட்டக் கமிஷன் உறுப்பினர்களை. அவர்கள், அதற்கான திட்டத்தைத் தீட்டித்தர வேண்டுமெனக் கேட்டிருக்கிருர்.*

மகிழ்ச்சியே, காரியம் நிறைவேறப் போகிறதோ, இல்லையோ—திட்டமாவது போடவேண்டுமெனத் தெரிவித்திருக்கிருரே, அதுவரையில் மகிழ்ச்சிதான்.

எப்படி, எல்லோருக்கும் வேலை கிடைக்கும்படிச் செய்ய முடியும்? அதுவும், இன்றுள்ள அரசியலமைப்பில்.

நேரு, அதைப் பற்றிக் கவலைப்படவில்லை—"என் ஆசை, இது. செய்ய வேண்டும்" என்று கூறியிருக்கிருர்.

ஆசை, அருமையானது! அதிலும், மாறன்களைக் கண்டு கொண்டிருக்கும் நாம், மனதாரப் பாராட்டக் கூடியது! இந்த வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தால், ஒவ்வொரு மனிதனும் ஏதோ உழைத்தாவது, வாழ்ந்துவிட முடியும்.

"ஆனல், எல்லோருக்கும் எப்படி வேலை கொடுப்பது?"

"புதிதாக ஆலைகள் வேண்டும்"

"யார் அந்த ஆலைகளைக் கட்டுவது?"

"ஆலைகள் யாவும் சோஷியலிச முறையில் இயங்கவேண்டும் என்பதே எனது ஆசை. ஆனல், தற்காலிகமாக, தனிப்பட்ட முதலாளிகள் இம்முயற்சியில் ஈடுபட வேண்டும்."

தனிப்பட்ட முதலாளிகள், ஆலை கட்ட வேண்டுமாம்!

அதன் மூலம், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமாம்!!

பிறகு, சர்க்கார் என்ன செய்யும். ஐந்தாண்டுத் திட்டத்துக்கு, பண வசூல் செய்யும் — கடனுகவும், வரியாகவும்!

வேலையில்லாத் திண்டாட்டத்தை முதலாளிகள், ஒழிப்பார்கள்.

நேரு சர்க்கார், அணை கட்டுதல், பாலம் போடுதல், போன்ற ஐந்தாண்டு அபிவிருத்திகளைக் கவனிக்கும்.

இந்த 'அபிவிருத்திகளால்' தான், ஏழை மக்களின் பணம் ஏராளமாகக் கொள்ளை போவதாகச் செய்திகள் வருகின்றன. அது, நீடிக்குமாம்— அதுவும், இப்போதிருப்பதைப் போல.

இப்படித் திட்டம் தீட்டுவதன் மூலம், நாட்டை சோஷியலிச நாடாக ஆக்கப்போகிருராம்.

அவரது பேச்சைக் கேட்ட 'மெயில்' ஏடு, எழுதுகிறது—"இந்தியா, முதலாளிகளையும் தொழிலாளிகளையும் பகைக்காத நாடென்று சொல்லும் பண்டிதர், எப்படி சோஷியலிச நாட்டை உண்டாக்கப் போகிருர்?", என்பதாக.

நல்ல கேள்வி. புலியும் வாழும் புள்ளிமானும் கூட உலவுமாம் — சொல்லுகிருர், பண்டித நேரு.

நாட்டில், இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பின்னும், இருக்கின்ற நிலை—இது:—

எண்ணைத் தொழில்	95 பங்கு
ரப்பர்	90 பங்கு
தீப்பெட்டி	90 பங்கு
சணல்	89 பங்கு
தேயிலை	90 பங்கு
சுரங்கம் (உலோகம்)	70 பங்கு
நிலக்கரி	62 பங்கு
பருத்தி	21 பங்கு

இந்தியத் தொழிலில், அந்நிய மூலதனம், இருப்பது பற்றிய சராசரி புள்ளி விபரம், இது; தொழிலில்—பிறர் ஆதிக்கம், இவ்வளவு இருக்கிறது.

இதே நேரத்தில், இன்னும் தனிப்பட்ட ஆலையரசர்கள்—வரலாமாம்; அழைக்கிருர்.

அதே நேரத்தில், சோஷியலிச நாடாக்கவேண்டும், என்றும் கர்ஜிக்கிருர்.

தொழிலில், அந்நியரும், இங்குள்ள கொள்ளையரும்—ஏதேச்சாதிகாரம் செய்து கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் வளம், அவர்கள் இரும்புப் பெட்டிக்குச் சென்று கொண்டிருக்கிறது! இதோ, மாறன் கொலை செய்கிருன், குழந்தையை. அறமன்றம், தெரிவிக்கிறது—விரக்தியின் விளைவு, என்று.

இந்த அக்கிரமம் ஒழிய வழி செய்ய வில்லை. ஏழைகளை வாழ்விக்கும் திட்டமெதுவும் தென்படவில்லை. சமுதாய அடிப்பீடம், அப்படியே இருக்கப் போகிறது. எவ்வித மாற்றமும் இருக்கப் போவதில்லை.

முதல் ஐந்தாண்டுத்திட்டம் — 'சில புது பணக்காரர்களை', உண்டு பண்ணியிருக்கிறது. 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும்', அதைச் சரிவரச் செய்யப் போகின்றதே அன்றி—நிலையான பயனைத் தரப் போவதில்லை—ஏழையின் வேதனையையும் தீர்க்கப்போவதில்லை.

பிறப்பு

'திராவிட நாடு' அலுவலகத் தோழர் வி. எம். பஞ்சாட்சரத்தின் துணைவியார் உருக்குமணி 31—10—54 ஞாயிறன்று ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானுர் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிருேம்.

★ கடல், பெரிதுதான்! ★

திரும்பினார்; தெரிசித்தனர்.

மகிழ்ச்சியோடு இறங்கினார்—மலர்மாலை சூட்டி, வரவேற்றனர்.

நிருபர்களைச் சந்தித்தார்; நெடுநேரம் பேசினார்.

இரு பெரும் நாடுகளும் இனி அதிக ஒற்றுமையுடன் வாழும் என்றார்.

'இயலுமோ?' என்று கேட்டார், ஒருவர்.

'ஏன்?' என்றார், அவர்.

"நீங்கள் சென்று திரும்பியது சிவப்பு நாடு; இந்தியா அப்படி அல்லவே!"

"உண்மைதான். நாம், மேற்கத்திய ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கிறோம். அவர்கள் ரஷ்யப் பாதையில் செல்லுகின்றனர். இரண்டிலும், நன்மையும் உண்டு; தீமையும் உண்டு" என்றார்.

*

திக்விஜயத்தால், ஆசியஜோதி, அதிகமாகிவிட்டது! அமெரிக்கா அலறுகிறது!! சமாதானம் தழைக்கும்! மனிதாபிமானம் மலரும்!!

அகில உலக அரங்கில் இந்தியாவின் நிலை, பெருமைக்குரியதாய் விட்டது. பிரதமர் நேருவின் புகழ், வானளாவ வளர்ந்து விட்டது.

என்ன கவலை, இனி! ஏற்றம் பெறுவோம் நாம்!!

நேருவைக் கொண்டிருக்கிறோம், நாம்—சீர் பெறப்போவது நமது காங்கிரசே.

*

நாட்டில் நாலெட்டு கட்சிகள் உண்டே! எதற்குண்டு இந்தப் பாக்யம்? ஆளும் கட்சிமட்டுமல்ல காங்கிரஸ்! அகில உலகுக்கும் அறிவுரை கூறும் கட்சி!!

வளர்ந்துவிட்ட மரம் — கனிகள் பறிக்க மேல்நாட்டினர் எல்லாம் வருகின்றனர். காந்தீயப் பாதை தழைக்கிறது; செழிக்கிறது.

எந்தக் கட்சிக்குண்டு, அந்தப் பெருமை? எம்மைப் பாரீர் – பதில் சொல்வீர். நாற்பது கோடி மக்கள் என்றால், அவர்களனைவரும் சங்கமம் ஆவது எங்களிடமன்றோ? எல்லோருக்கும் உள்ள ஒரே கட்சி, காங்கிரஸ் அன்றோ! இந்தப் பெருமை யாருக்குண்டு? எங்களுக்கே அன்றோ!

*

இவ்வண்ணம், ஆனந்தச் சிந்து பாடுவோருண்டு, தெருத் திண்ணைகளில். பாராளும் பண்டிதரின் ஜோதியையும், உலகில் அவருக்குள்ள கியாதியையும் எடுத்துக் காட்டி, அதோடு காங்கிரசின் மாட்சியையும் எடுத்துச் சொல்லுவார்கள்.

தேசியத் தொண்டர்கள்மட்டுமல்ல, பழுத்த மரம் நாடும் பண்பு கொண்டோரும்கூட இது சமயம் தமக்குக் கிடைத்த பதவிப் பெருமையைக் காப்பாற்றிடும் நோக்கில், செல்லுமிடந்தோறும் இவ்வண்ணம் செப்புகிறார்கள்.

அகில இந்தியக் கட்சியாம்! அதற்குள்ள பெருமை பெரியதாம்!

காங்கிரஸ் — அகில இந்தியக் கட்சிதான். அதனை, நாம் மறுக்கவில்லை. ஆனால், அதன் பெருமை அனந்தம் என்கிறார்களே, அந்த இடம்தான் புரியவில்லை.

நாற்பது கோடி மக்கள் சங்கமமாகும் சங்கம் என்கிறார்களே அதுதான் விளங்கவில்லை.

*

பண்டித நேரு சென்று திரும்பினாரே சீனா, அதைப்பற்றி அப்பாசாமி என்பார், கட்டுரையொன்று தீட்டியுள்ளார், 'இந்து'வில்.

சீனாவின் மொத்த மக்கள் தொகை 60 கோடி! அந்நாட்டை யாளும் கம்யூனிஸ்டுக் கட்சியின் மொத்த உறுப்பினர்கள் 60 லட்சம் பேராம்!! அவர்களனைவரும் ஒரே மனப்பான்மையுடனிருந்து பணியாற்றுவதாலேயே, இரண்டு மூன்று ஆண்டுகளில் ஏராளமான காரியங்களைச் செய்ய முடிந்ததாம், மாசேதுங் ஆட்சியால்.

அந்த மனப்பான்மை, உண்டா, இங்கு? ஆசிய ஜோதிபற்றியும், பெரிய கட்சி என்றும், பெருமையடித்துக் கொள்கிறார்களே! அந்தப் பெரிய கட்சி, எப்படியிருக்கிறது?

ஆனந்த ஆரவாரங்களை ஏந்திய வண்ணம் இறங்குகிறார், பண்டிதர் டில்லியில்! எல்லோரும் போற்றுகிறார்கள்—புகழ்கிறார்கள்.

எங்கள் காங்கிரஸ் தலைவர் — என்று, குதூகலமாகக் கூறுகிறார்கள், தேசிய நண்பர்கள்.

இறங்கிய அவரை, தோழர்களின் ஆனந்தமட்டுமல்ல; பல வேலைகளும், சந்திக்கக் காத்திருக்கின்றன! நாற்பது கோடிமக்களையாளும் பிரதமரல்லவா — அவருக்கு நானாவித அலுவல்கள் குவிந்துதான் கிடக்கும்—அகமத் கித்வாய் வேறு மாண்டதால், மந்திரி சபையில் கூடமாற்றம் செய்ய வேண்டியிருக்கும்—இரண்டு மூன்று மாகாணங்களின் கவர்னர் பதவி முடிவடையப்போவதால் புதுக் கவர்னர்களைப் பொறுக்கியெடுக்கும் தொல்லையும் இருக்கும்—இலங்கை முதலிய இடங்களுக்கு அரசுத் தூதர்களை நியமிக்கும் வேலையும் இருக்கும் — இவைகளை விட இன்னொரு பெரிய வேலையும், எதிர் நோக்கியிருக்கிறதாம்! அதுவும், டில்லியில்!! அரசு வேலை அல்ல; 'பெரிய கட்சி' பற்றிய தகராறு.

'டில்லி' மாநகர காங்கிரஸ் விவகாரம் 'பெரிய தலைவலி'யாயிருக்கிறதாம்—'தலைவலி' என்பது நாம் கூறுவதல்ல, 'இந்து' நிருபரே எழுதுகிறார். பண்டிதர் சீனாசென்ற இடைவெளியில், ஏற்பட்டது போலும் என்றெண்ணுவீர்கள்! அல்ல, அல்ல. **ஓராண்டுகாலமாக,** இருக்கிறதாம்!!

"அகில உலகுக்கும் சமாதானம் தேடி அலைகிறார், நேரு"

"ஆனால், அவர் இருக்குமிடத்தில் ஏற்பட்டுள்ள தகராறைத் தீர்த்துவைக்க முடியவில்லை"

நாம் கூறவில்லை; டில்லியில் வதியும் பிறநாட்டு அரசியல் தூதர்கள் இவ்வண்ணம் கருதும்விதமாக, அடிக்கடி நாற்றம் மேலெழுந்து கொண்டுள்ளதாம்.

"Delhi being the seat of the capital, the activities of congressmen receive wide publicity and attract undue Notice"

என்கிறார், நிருபர். "டில்லி, காங்கிரசின் தலைமை இடமாக இருப்பதால், காங்கிரஸ்காரர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் சீக்கிரம்

பரவிவிடுகிறது. எல்லோருடைய கவனத்தையும் இழுக்கிற"தாம். இந்தத் தகராறு, டில்லி நகரை ஆளும் மந்திரி சபையில்மட்டுமல்ல—காங்கிரஸ் கட்சிக்குள்ளும் இருக்கிறதாம். கட்சிக்குள் கலாட்டா; மந்திரிசபையிலும் குடுமிபிடிச் சண்டை.

இதுவரை, எத்தனையோ தடவை மத்யஸ்தம் செய்துவைத்தும், வேதாளம் பழையபடி முருக்கமரம் ஏறிக்கொள்ளுகிறதாம்.

அங்குள்ள மந்திரிசபை, மற்ற மாகாணங்களைப்போல பத்துப் பனிரெண்டு பேர்களைக் கொண்டிருப்பதல்ல! மூன்று பேர்!! அந்த மூவரும், 'நித்யகண்டம் பூரணாயுசாக' விளங்குகின்றனராம். 'ஒவ்வொரு நாளும் அம்மூவரும் மோதிக்கொண்டே இருக்கின்றனராம்' இதன் விளைவு, அண்மையில் நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் கடும் தோல்வி ஏற்பட்டிருக்கிறது காங்கிரசுக்கு! ஏகச் சக்ராதிபதி போல இருந்த அவர்கள், நகரசபையில், 'நல்ல' தோல்வியைக் கண்டிருக்கிறார்கள்!!

இது, இங்குள்ள வெளிநாட்டு தூதுவர்களை வியப்பிலாழ்த்தியிருக்கிறதாம்.

ஒரு பக்கம், 'ஜே' முழக்கம்! மற்றோர் பக்கம் சாக்கடை நாற்றம்!!—நாடு முழுமையும், காங்கிரசின் நிலை இப்படித்தானே, என்று பேசிக்கொள்ளுகிறார்களாம்.

அகில உலகப் புகழ்க் கொடி, ஒரு பக்கம். ஆனால், அந்த ஜோதி இருக்குமிடத்திலோ, தகராறு! அதுவும் ஓராண்டுகாலமாக!! பண்டிதர், பலதடவை மத்யஸ்தம் செய்துவைத்தும்!!

இந்தச் சண்டையைக் கூட்டித் தீர்த்துவைக்க முடியவில்லையே, இந்தியப் பிரதமரால் — இவர், எப்படி, அகில உலக மத்யஸ்துக்குக் கிளம்பிவிடுகிறார், என்று அமெரிக்க தூதராலயங்களில், கேலி பேசுகிறார்களாம்.

ரஷ்யத் தூதராலயங்களோ, இதையெல்லாம், 'இப்படித்தான் நடக்கும்' என்று, கவனித்த வண்ணம் இருக்கிறார்களாம்.

வெளியில் வெண்சாமரம்! வீட்டுக்குள், வெட்டுக் குத்து!!

ஊர் சிரிக்கிறது — இந்த லட்சணத்தில், பெரிய கட்சியாம் அது! அதனை நம்பினால்தான் நாடு உய்ய முடியுமாம்!! இங்கிருக்கும் "ஏமாறும் சாமி"கள், பேசுகிறார்கள்.

டில்லி — சின்னஞ் சிறு இடம்! அங்கு இந்த நிலை! இந்த 'தலைவலி'யைத் தாங்கமுடியாத நேரு, "டில்லி ஒரு மாகாணம் போல இருப்பதால்தானே இத்தனைப் பதவிப் போட்டித் தகராறுகளும் முளைக்கின்றன. சென்னை—பம்பாய்—கல்கத்தா போன்ற நகரங்களைப் போல ஆக்கிவிட்டால், என்ன செய்வீர்கள்?" என்று அடிக்கடி மிரட்டி வருகிறாராம். அப்படியிருந்தும், பயனில்லையாம்!

சிறு இடத்திலே, இவ்வளவு சிண்டு பிடிச் சண்டையென்றால், ஒவ்வொரு மாகாணத்திலும் இன்னும் எத்தனையெத்தனையிருக்கும்—என்று, வெளியார், கேலி பேசு பேசுகிறார்களாம், கேலி!

இது பொறுக்கமுடியாததால் தான், பண்டிதர், காங்கிரஸ் தலைமைப் பதவியை விட்டு விலகத் துடிக்கிறாராம்.

கடலைப் போன்றது எமது காங்கிரஸ்!—என்று, கர்ஜிக்கின்றனரே இங்குள்ள தோழர்கள், இப்போது ஏதோ மாவட்டத் தேர்தல்களில் பெற்ற வெற்றியைக்காட்டி. அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்—கடல், பெரிதுதான்! ஆனால், நீர், தாகம் தீர்க்காது!! அருவி, சிறிதுதான—அதன் நீர், மக்களுக்குப் பயன்படும். அத்தகைய சிந்து பாடும் சிற்றருவி, ஆக முடியாது, காங்கிரஸ்! ஏனெனில், அவ்வளவு பெரியதாயிருக்கிறது—அனைவருக்கும் இடமுண்டு என்று சொல்கிறது!! மீனுக்கும் உண்டு—திமிங்கிலங்களுக்கும் இடமுண்டு, பிரபல ரஷ்யநாவலாசிரியர் ஒருவர் சொன்னது போல, பெருமீன்கள் சிறுமீன்களை விழுங்க ஆரம்பிக்கின்றன—சிறுமீன்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள ஓடி ஆடித்துடிக்கின்றன. அதனால் தான், 'டில்லி'கள் உண்டாகின்றன! இதுபோன்ற 'டில்லிகளை', நேரு பண்டிதரல்ல—இனியாராலும், தடுக்க முடியாது. ஏனெனில், காங்கிரஸ், ஒருவித லட்சியமும் இல்லாத இயக்கம்! தேய்ந்து போன தேசீய இயக்கம்!! அந்தக்கடலிலே, முதலாளித்துவம் எனும் கப்பல் மிதக்க முடியுமே யொழிய—பலருக்கும் பயன்பட இயலாது! முடியாது!

★

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குரோதமும் கிடையாது. அப்படியிருந்தால் அண்ணாவையும் இந்த நெடுஞ்செழியனையும் கடவுள் தண்டிக்காமல் விட்டு வைப்பாரா? எத்தனையோ மடாதிபதிகளை விட ஏற்றமானவர்களாகவும், எடையும் எழிலும் கூடியவர்களாகவும் நமது கட்சிக்காரர்கள் விளங்குகின்றனர்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அறிவொடு விளங்குவதெதுவோ அதற்கு அஞ்சலி செலுத்துவதில் தவறில்லை. ஆனால் அறிவு கெட்ட ஆபாசத் தத்துவங்களுக்கு பகுத்தறிவு படைத்த மனிதன் பணியலாமா?

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"என்று பெருமையோடு ஆதிஸ்கர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இந்தக் கூற்றில் அவர்களுக்கு நாணயமான நம்பிக்கையிருந்தால் ஒரு அண்ணாத்துரையும் ஒரு நெடுஞ்செழியனும் பேசுவது கண்டு ஆஸ்திகர்கள் ஏன் நடுநடுங்க வேண்டும். ஓர் அணுவும் அசையாது அவன் அருள் இன்றியென்றால் அண்ணாவின் நாக்கும் என் நாக்கும் மட்டும் அவனுடைய அனுமதியின்றி எப்படி அசையமுடியும்? எனவே நமது கூற்றிற்கு கடவுள் தடையுத்தரவு போடவில்லை யென்றாகிறது. கடவுளே போடாத தடையுத்தரவை இவர்கள் ஏன் போட விரும்புகிறார்கள்?

தற்பெருமைக்காக சொல்கிறேனென்று நினைக்கக் கூடாது. எந்த இடத்தில் கூற வேண்டுமோ அந்த இடத்தில் கூறலாமென்ற விதிக்கமையக் கூறுகிறேன். நான் படிக்க ஆரம்பித்த காலத்திலிருந்து எம். ஏ. பாஸ் செய்யும் வரை ஒரு வகுப்பிலாவது தவறியது கிடையாது. இத்தனைக்கும் 2-வது பாரத்துக்குபின் கடவுளுக்கு ஒரு வாழைப் பழம் லஞ்சம் கொடுத்ததில்லை. ஒரு தேங்காய் முடி கொடுத்தது கிடையாது. நானறிய 150 தேங்காய் உடைத்தவர் சித்தியடையாமல் தவறியிருக்கிறார். இதனால் தேங்காய் உடைக்காதவர் வெற்றியடைவார்—உடைப்பவர் தோல்வியடைவாரென்று நீங்கள் கருதிவிடக் கூடாது. நாங்கள் சொல்வது பரீட்சையில் தேறுவதற்கும் தேங்காய் உடைப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதுதான்.

]சுதந்திரன்]

★

ஒரு சித்திரம்

கடிகாரம்

[அரங்கண்ணல்]

கதைகள் என்றால், முன்னுரையொன்று இருக்கவேண்டுமாமே! இந்தக் கதைக்கு முன்னுரை எழுத எவரையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை: இதன் முழுப் பொறுப்புக்கும், நானே உரிமையாவேன். இது, நான் கேட்ட கதை. கேட்டதை, உங்கட்குச் சொல்லப்போகிறேன். மனதிலுள்ள பாரம் இறங்கும் என்கிற மனத்திருப்தி, கிடைக்குமல்லவா? நான், வட்டிக்கடை வைத்திருந்தபோது, நடைபெற்ற சம்பவம், இது. வட்டிக்கடையிருக்கிறதே, அங்கு, ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்தால் போதும்! ஐசன்ஹோவர் மட்டுமல்ல, ஆச்சாரியாரும், ஒரு அதிதீவிர 'சமதர்மி'யாகிவிடுவார்! ஆமாம், அங்கு வரும், ஆணும் பெண்ணும், தத்தமது வாழ்க்கைத் தொல்லைகளைக்கூற வேண்டாம்—கொஞ்சம் நம்பக்கம் திரும்பினாலே போதும்—அப்பப்பா! அந்தப் 'பார்வைகள்' 'இளநும் சிந்தனை இருக்கிறதே, அதற்குமட்டும் உருவமிருந்தால், நம்மையேவிழுங்கிவிடும்! அவ்வளவு, துன்பங்கள், நிறைந்து கிடக்கும்!! தங்க அரைஞாணுடன் வந்து பணம் கேட்கும் தங்கப்பன்—'கில்டு' மோதிரத்தை வைத்து 50 ரூபாய் கேட்கும் எத்தப்பன்—வெள்ளிமிஞ்சைக் காட்டி 8-அணாவாவது கொடு சாமி என்று கெஞ்சும் அஞ்சுகம்—இதைப்போல, எத்தனை எத்தனையோ! சிலர், வருவர்—'அடகு வைத்து பணம் கேட்பது, தன் அந்தஸ்துக்கு குறைச்சல்' என்று கருதும் பேர்வழிகள். ஆனால், என்ன செய்வது? அவசரமாகப் பணம் தேவைப்படும்! அருகே, வருவர்—'செட்டியார், சார்?' என்பர். உலகத்தையே நிறுக்கும் தராசுகளாகிவிட்ட என் கண்களை நிமிர்த்துவேன் —விஷயம் எனக்கு விளங்கிவிடும். சில சமயங்களில், வேடிக்கை செய்ய ஆசைவரும். அப்போது, அவரைக் கேட்பேன். "சார், நகை, உங்களுடையதா?" இந்த 'ரகப்'பேர்வழிகள். 'தன்னுடைய அவசரத்துக்காகப் பணம் வாங்க வந்ததாகத் தெரிவிக்கக் கூசுவார்கள். அப்படிச் சொன்னால் அவர்கள் 'அந்தஸ்து' கெட்டுவிடுமாம்—அந்தஸ்து, என்கிற வார்த்தையை முதன் முதலில் கண்டுபிடித்தவன் அகப்பட்டால், அவன் மூக்கையறுத்து முச்சந்தியில் நிறுத்த வேண்டும். என்கிற ஆத்திரம், இதுபோன்ற நேரங்களில் வரும். ஏனெனில், இந்த 'அந்தஸ்து'க்காரர்கள், எத்தனை எத்தனை, பொய் சொல்லுகிறார்கள்! "சார்! நேக்குப் பணம் தேவையில்லை, சார்—என், சிநேகிதன் இருக்கானேல்லியோ?—உங்களுக்கு எப்படித் தெரியும்—நேக்கு, நாசிம்மன்னு, ஒரு சிநேகிதன், ஆபிசிலே, இருக்கான். அவனோட, அத்திம்பேரோட அக்காவுக்கு ஒரு அத்தையுண்டு. அவ, மெட்ராசு, ஜெனரல் ஆஸ்பத்திரியிலே, கிடந்தா — ஜெனரல் ஆஸ்பத்திரியில் மேஜர் ஆபரேஷன் செய்ற திருமலாச்சாரி, அவனுக்குத் தூரத்து உறவாம் — ரொம்ப, சீரியஸாயிருக்காம். இவன், போகனும். தேதியோ மாதக் கடைசி. பணமோ, இல்லை. பல்லைக்காட்டறான். நான் உங்க கடைக்கு போகச் சொன்னேன். பழக்கமில்லையாம்—இதுக்கு என்ன பழக்கம் தேவையா? சொல்றான், Fool. சரி! இங்கே, கொடு—நான், போயிட்டு வர்றேன்னுட்டு, வந்தேன்" இப்படி ஒரு அரைமணி நேரம், சராமாரியா சங்கதிவரும். சகித்துக்கொண்டு, பணத்தைக் கொடுத்து அனுப்புவேன். இப்படி வருகிற ஆட்களை, ஒரு ஆட்டு ஆட்டி அனுப்புவதில், அலாதி திருப்தி, எனக்கு. என் திருப்தி, கிடக்கட்டும். இப்படிப்பட்ட வட்டிக்கடை முதலாளியான நான், வழக்கொன்றிலே சிக்கிக்கொண்டேன்—கடிகாரம் ஒன்றை அடகு வாங்கினேன். அது, திருட்டுக் கடிகாரமாம். எனக்குஎப்படித்தெரியும்? வருவோர் போவோர் முகத்தில், 'இவன் திருடன்—இவன் திருடாதவன்' என்று முத்திரையா, குத்தியிருக்கிறார், கடவுள். ஒவ்வோர் விதத்தில், உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் திருடர்கள்தானாம்!— ஒரு நாவலில், படித்திருக்கிறேன். அப்போது எனக்கு ஓர், விசித்திரமான சந்தேகம் உண்டாவது வழக்கம். "ஏன், இப்படி திருடனுகிறார்கள்?" என்பது தான், அது. இத்தகைய சந்தேகம் எழ ஆரம்பித்து விட்டாலே புரட்சி மூளுமாம்! — இப்படியும், ஒரு நூலிலே, படித்திருக்கிறேன். எனக்கேற்பட்ட சந்தேகத்தையும் நிவர்த்தித்து, என்னை வட்டிக்கடை முதலாளி என்ற இடத்திலிருந்து விரட்டி, சந்திக்குச் சந்தி நின்று இந்தச் சமுதாயத்தைப் பற்றிக் கூச்சலிடும் சாமான்ய தொண்டனாக்கியது, இந்தக் 'கடிகார புராணம்' தான். வியப்பாயிருக்கலாம் உங்களுக்கு. கடிகாரத்துக்குமா புராணம், என்பதாக! பயப்படாதீர்கள்—இந்தப் புராணத்தில், மகத்துவம் எதுவும் கிடையாது — கண்ணீர் நிரம்ப உண்டு. நமது முன்னோர்களின் புராணங்களில் வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் — அது, வன்னிமரமாயிருக்கலாம்; சிவலிங்கமாயிருக்கலாம், பன்றியாயிருக்கலாம், மீனாயிருக்கலாம், கல்லாயிருக்கலாம், புல்லாயிருக்கலாம் — ஒவ்வோர், சித்துபுரிந்திருக்கும்! என் புராணக் கதாபாத்திரமான, 'கடிகார தேவனும்' சித்துகள், பல புரிந்தான். ஆனால் பழைய புராணங்கள் கூறும் கதாபாத்திரங்களின் சித்துக்கும், கடிகார தேவனின் சித்துக்கும், ஏராளமான வேற்றுமைகள் உண்டு.

'கடிகார தேவன்', என் கடைக்கு வந்தான்— தேவர்கள் எப்போதும் 'திடீர்ப்பிரசன்னமாவார்களாம்'!—

அதுபோலத் தான், வந்தான். அவர்களைத் தூக்கிவர, ஆளி வாகனம்—ஆடு வாகனம்—இப்படி உண்டு. ஆனால், இந்தத் 'தேவனை' தூக்கிவந்த வாகனம், **வரதன்.**

கடவுளரின் வாகனத்துக்கு, ஜோடிப்புகள் செய்துதானே, வெளியிலனுப்புவர்! அதைப் போல, என் கடைக்கு வரும்போதெல்லாம், 'ஜோடித்தபடி'தான் வரதனும், வருவான்!!

அந்தவாகனங்களுக்கு, பீதாம்பரம்—பெரிய மாலைகள்—ரத்தனக் கண்கள்—வைரப் பொட்டு— எல்லாம் இருப்பதுபோல,என்கடைக்கு 'தேவர்'களைத் தூக்கிவரும் வரதனுக்கும் ஜோடிப்புகள் உண்டு! இவனுக்கு பீதாம்பரம் இருக்காது—காதில், சிறுபீடித்துண்டு இருக்கும்' ரத்னக் கண்கள் இருக்காது— ரத்தம்போல் சிவந்த கண்களிருக்கும்; 'கடவுளைத் தூக்குவோர் பாராயணம் செய்வதுபோல, இவனது வாயும், மந்திர உச்சாடனம் செய்யும். ஆனால், விதம், வேறு! அந்த வாகனம், ஆடுவதுபோல், இவனும் ஆடுவான். ஜோடிப்புகளில், இருவாகனங்களுக்குமிடையிலும், ஒருவித்தியாசம். உண்டு. அது மரக்கட்டை! இவனோ, மனிதன்!! ஆகவே, 'ஆனந்த விகடனோ', அல்லது 'சுதேசமித்திரனோ', இரண்டும் கிடைக்கவில்லையென்றால், 'கல்கி'யோ போட்டபடிதான் வருவான்.

ஆனந்த விகடன்—கல்கி—சுதேசமித்திரன்—இவைகளைக் கண்டதும், உங்களுக்கு இந்தப் பெயர்களைக் கொண்ட பத்திரிகைகள்தான் கவனத்துக்கு வரும். 'வரதன் பாஷை'யில், 'இவை யாவும் யாரையும் குறிப்பிடுவன அல்ல'. எங்கள் வட்டாரத்தில், இந்த வார்த்தைகளுக்கு தனிப் பொருள் உண்டு. மதுவிலக்கு வந்தபிறகு கண்டுபிடிக்கப்பட்ட புது அகராதியில்தான், இதற்கெல்லாம் அர்த்தம் கிடைக்கமுடியும். அந்த அகராதியின் மொத்த வியாபாரி, வரதன் தான்.

"என்ன சாமி! இந்த கவர்மெண்டு, முட்டாள்தனமா நடக்குது சாமி. மது விலக்கு கொண்டாந்தீச்சே. எங்கே சாமி நடக்குது? என்னிடம் சொல்லுங்க சாமி — எது வேணும்னாலும் காட்றேன். ஆனந்த விகடன் வேணுமா? கல்கியா? சுதேசமித்திரனா?—என்பான்.

'ஆனந்தவிகடன்'-சிறுதுணுக்குகள் எனக்குப் பிடிக்கும்.

'கல்கி'யை — கதைகளுக்காக அல்ல — விளம்பரங்களுக்காகப் புரட்டுவேன்.

'சுதேசமித்திரன்'—செய்திகளைப் போடும் முறையில்ஓரளவு திருப்திப்படுபவன் நான்.

இந்தப் பத்திரிகைகளை இழுக்கிறானே — எனும் எண்ணத்தில், அவனைக் கேட்பேன். விளக்கம் தருவான். ஆனந்த விகடன் என்றால், **'உயர்தர மது வஸ்து'** என்று அர்த்தமாம். 'கல்கி'—என்பது, மதுவிலக்குக்குப் பிறகு ஆங்காங்கும் தயார் செய்யப்படும் **'கலக்கி'**யைக் குறிப்பதாம். 'சுதேசமித்திரன்'—என்பது பனைமரத்துப்'பால்' அல்லது தென்னைமரத்துப் 'பாலை'—சுதேசி சரக்கைக்குறிப்பிடுமாம்!

அந்த இடத்து அகராதியைப் பார்த்தீர்களா? கிருஷ்ணமூர்த்தி, 'கல்கி'யாகவும், மகாதேவன், 'தேவ'னாகவும் புனைப்பெயர் வைத்துக் கொள்வதைப்போல, வரதனும் புனைப்பெயர்கள் சூட்டியிருக்கிறான்.

காசு அதிகமானால் 'ஆனந்த விகடன்' — கூட்டம் அதிகமானால் 'சுதேசமித்திரன்' — கையில் காசில்லை என்றால் 'கல்கி' — இந்த 'ஜோடிப்புடன்'தான் வருவான், வரதன். வரும்போதெல்லாம் 'கடவுள்' சகிதமே வருவான். அவனுக்கு அன்றையப் பொழுதைப் போக்க, காசு தரும் பொருள்கள்தானே கடவுள்கள்?

ஒருநாள், அவன் கவலை போக்கும் கடவுளாக, கடிகாரம் ஒன்று கிடைத்திருக்கிறது — ஏந்தியபடி வந்தான்; தந்தான். 'கடவுளை'க் காட்டினால் போதும், 'பக்தர்'களுக்குப் படியளக்க, என்னைப்போன்ற வட்டிக்கடை மகிபர்கள், எப்போதும் தயாராகத்தானே இருப்போம்?

கடிகாரத்தைப் பார்த்தேன்; மிகவும் அழகாயிருந்தது. "வரதா, ஏதப்பா இது?" என்று கேட்டேன். அவன் கண்களில் கோபம் கொந்தளித்தது. "என்ன சாமி! என்னைத் திருடன்னு நினைச்சுக்கிட்டியா?" என்றான்.

"இல்லை; மிகவும் அழகாயிருக்கிறதே என்று கேட்டேன்"

"அழகான வஸ்துக்கள் எங்களிடம்மட்டும் இருக்காதோ?"

"கோபித்துக் கொள்ளாதேப்பா! எவ்வளவு பணம் வேண்டும்?"

"ஏதாவது கொடு சாமி"

கடிகாரத்தை எடுத்துவைத்துக் கொண்டு, பணத்தை எண்ணினேன். அப்போது, வழக்கமாக என் கடைக்கு வரும் பைத்யக்காரன் ஒருவன் பாடிக்கொண்டு வந்தான். தினசரி சந்திக்கும் பலரில், இந்தப் பைத்யமும் ஒருவன். இவன் 'வட்டி' வியாபாரத்துக்கல்ல என் கடைக்கு வருவது! ஒரு பிடிசோறு!—ஒருநாள் தவறாமல் வருவான்—வாங்கிக்கொண்டு போவான்.

வரதனைப்பற்றிச் சொன்னநான், இந்தப் பைத்யக்காரனைப்பற்றியும் சொல்லவேண்டும் உங்களுக்கு. இவன்மீது எனக்குப் பரிதாபம் வந்த கதையே விசித்திரமானது. முதன் முதலில் கடை வீதிக்கு வந்தபோது, ஒரு பாட்டை பாடிக் கொண்டு வந்தான். அந்தப் பாட்டு, இது:

உண்மையில் கடவுள்
உண்டோ இல்லையோ
உணர்ந்திடுவாய் தமிழா நீ

ஆண்டிக் கூட்டத்தால்
அழியும் உன் காசு
அவனியில் அவர் பேச்செல்லாம்
வெறும் தூசு

ஒருவன் மாடியிலும்
மற்றொருவன் கோடியிலும்
உலவிட ஏன் வைத்தான்?

பந்தியில் ஒருவனும்
முச்சந்தியில் இன்னொருவனும்
உலவிட ஏன் வைத்தான்?

இப்படி பாடிக்கொண்டு வந்தால் யார் பிச்சை போடுவார்கள்? சிலர் விரட்டினர்; பலர் அதட்டினர்; வேறு சிலர் அடிக்கவும் செய்தனர் அவனை. அவன் இது எதையும் பொருட்படுத்தவில்லை. எப்பொழு

நம்மிடையே
ஷேக்ஸ்பியர்!
*
தீட்டியது:
சி. சந்தானகிருஷ்ணன்
விலை 8 அணா.
*
எழுதுக:—
செயலாளர், தி. மா. மு. கழகம்,
அரசினர் கல்லூரி,
குடந்தை.

தும் அதே பாட்டைத்தான் பாடிக் கொண்டிருப்பான். என் கடைக்கு அவன் வந்து நின்றபோது, எனக்குப் பரிதாபமாயிருந்தது. பைத்யக்காரர்கள் என்றாலே எனக்கோர் பரிவு பிறப்பது சகஜம். சிறு வயதில், "ஒவ்வொரு பைத்யத்தின் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு இரகசியம் மறைந்திருக்கும்" என்று ஒரு நூலில் நான் படித்திருந்த வாக்கியம் என் மனதில் பதிந்து போயிருந்தது. அதனால், அவனைக் கண்டதும் ஓரணா காசு எடுத்துக் கொடுத்தேன். அந்தக் காசை கையிலெடுத்து இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்தான், அந்தப் பைத்யம். திடீரென அழத் தொடங்கிவிட்டான். அந்தக் காசையும் என்னிடம் எறிந்துவிட்டு "ஐயா, எது வேண்டுமானாலும் கொடுங்கள் ஐயா—இந்தக் காசுமட்டும் வேண்டாம்யா — வேண்டாம்" என்று அழுதவாறே அலறினான். ஆச்சரியமாயிருந்தது, எனக்கு. அன்று முதல் அவன் வந்தால், பையனைவிட்டு ஏதாவது வாங்கி வந்து தரச் சொல்லுவேன். வரதனிடம் பேரம் நடத்திக்கொண்டிருந்தபோது வந்த அந்தப் பைத்யக்காரன் 'ஐயா' என்று கூப்பிட்டான். பணத்தை எண்ணிக் கொண்டிருந்த நான், அவன் பக்கம் திரும்பி 'என்னப்பா' என்று கேட்டேன்.

"இப்போது வாங்கிவைத்தீர்களே, கடிகாரம்! அதைக் கொஞ்சம் காட்டுகிறீர்களா?"

"உனக்கேன், அது!"

"கொஞ்சம் காட்டுங்கள்!"

எடுத்துக் காட்டியதுதான், தாமதம்! பைத்யம், வரதனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு 'ஏது, உனக்கு இந்தக் கடிகாரம்? உண்மையைச் சொல்! ஏது, உனக்கு?' என்று கோபத்தோடு, கேட்க ஆரம்பித்தான். வரதனோ, பலசாலி! பைத்யத்தை வரதன் தள்ள, வரதனைப் பைத்யம் தள்ள, கடைவீதியில் 'கலாட்டா' உண்டாகிவிட்டது.

விளைவு—நான், கோர்ட்டில்போய் நிற்க வேண்டியிருந்தது.

வரதன்மீது, திருட்டுக் குற்றம் சாட்டினர், போலீசார்!!

வழக்கில்—நான், சாட்சி.

பைத்யத்தை, விட்டுவிட்டார்கள் —அவன் பைத்யம் என்ற காரணத்தால்.

கண்களில் நீர் ததும்ப வரதன் மனைவி வள்ளியும், நின்றுகொண்டிருந்தாள்.

கடிகாரத்தை அவளிடமிருந்து கொண்டுவந்ததாக, வரதன் சொன்னான்! அதனால், அவளையும் அழைத்து வந்திருந்தனர், கோர்ட்டுக்கு!!

மாஜிஸ்திரேட் மருதவாணம் பிள்ளை, வந்தார்! அமர்ந்தார்!! கடிகார வழக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. மாஜிஸ்திரேட் மருதவாணம் பிள்ளை யென்றால், எங்கள் பக்கத்தில் பிரபல்யமானவர். நீதிமான்—உதார குணம் படைத்தவர் —உத்தமோத்தமர் என்றெல்லாம் சொல்வர், ஊரில். மாதா மாதம் வாங்கும் சம்பளத்தில் கால் பகுதியை அம்மன் கோயில் ஆராதனைக்கும், இன்னொரு கால்பகுதியை சிவன் கோயில் அபிஷேகத்துக்கும், அவர் தருவது வழக்கமாம். அக்கு தொக்கு இல்லாதவர், என்பார்கள் ஊரார். குழந்தை குட்டி, குடும்பம் என்று எதுவும் கிடையாதாம் அவருக்கு!! எங்கெங்கு பாகவத காலட்சேபம் நடைபெற்றாலும் அவர், இருப்பார். அவ்வளவு பெரிய பக்திமான்! கோர்ட்டிலும் கூட, நீற்றுப்படையுடன், சாட்சாத் கைலாயத்தில் வீற்றிருக்கும் முனிவர்போலக் காட்சி அளித்தார், மருதவாணர்.

வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று.

வரதன்—இதுவரை எத்தனை தடவை ஜெயிலுக்குச் சென்றிருக்கிறான், அவன் செய்துள்ள குற்றங்கள் என்னென்ன என்பதையெல்லாம் எடுத்துரைத்தனர், சர்க்கார் தரப்பில்.

என்ன நேருமோ!—என்று பயந்தவாறு நின்றுகொண்டிருந்தேன், நான்.

வரதனின் மனைவி வள்ளியோ, மிரள மிரள விழித்துக்கொண்டிருந்தாள்.

வரதனுக்கு இதெல்லாம் சகஜம்! ஆகவே, அவன் சிறிது கூடக் கவலைப்படாதவனாகயிருந்தான். பக்கத்திலிருப்போரிடம், "நான் பல பொருள்களை திருடிக்கொண்டு வந்து அகப்பட்டுக் கொண்டிருப்பது உண்மை. ஆனால், இந்தக் கடிகாரம், திருட்டுச் சொத்து அல்ல! என் வள்ளியினுடையது. நேற்று, அவளைப் பணம் கேட்டேன், 'கல்கி' வாங்க...இல்லை யென்றாள் — அவள், காசுவைத்திருக்கும் அடுக்குப் பானைகளையெல்லாம் தேடினேன்—காசு இல்லை! ஆனால் இந்தக் கடிகாரம் கிடைத்தது!! நான் திருடினேன் என்று போலீஸ் சொல்லுது. ஒரு முறை திருடனாகி விட்டால், அப்புறம், சாகும் வரையிலும் அவன் திருடனாகவா இருக்க வேண்டும்?" என்பதாக. அவனுடைய பேச்சை யாரும் இலட்சியம் செய்யவில்லை! அவன் கேட்ட கேள்விக்கும் பதில் கூற முன்வரவில்லை!!

வழக்கு விசாரணைக்கு வந்ததும், போலீசார் தாங்கள் கைப்பற்றிய கடிகாரத்தை மாஜிஸ்திரேட் மருதவாணர் முன் வைத்தனர்.

அந்தக் கடிகாரத்தைப் பார்த்ததும், மருதவாணர் முகத்தில் திகைப்பு பரவிற்று! குற்றவாளிக் கூண்டில் நிற்கும் வரதனையும், வள்ளியையும் மாறி மாறிப் பார்த்தார் — அப்படியே, பார்த்தவண்ணம் இருந்தார்.

ஏன் அப்படிப் பார்க்கவேண்டும்? ஏழைகளிடம் இப்பேற்பட்ட விலையுயர்ந்த கடிகாரம் ஏது?— என்ற சந்தேகம் அவருக்கும் ஏற்பட்டுவிட்டதோ?

ஐயோ பாபம்!—வரதனுக்குத் தண்டனை நிச்சயம் என்று எண்ணிக்கொண்டேன், நான்.

காஞ்சியில் மாணவர் கழகம்

★

காஞ்சி பச்சையப்பன் கல்லூரி மாணவர்களின் முயற்சியால் 7-11-54 ஞாயிறுமாலை "திராவிடநாடு" நிலையத்தில் தோழர் அரங்கண்ணல் அவர்கள் தலைமையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. ஏராளமான கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டார்கள். நேரடி அரசியலில் மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வதென்பது இதன் நோக்கமல்லவென்றும், எதிர்கால திராவிடத்துக்கான ஆக்க வேலைகளில் ஈடுபடும் நல்லறிவாளர்களாக மாணவர்களை மிளிரச்செய்வதே மாணவர் கழகம் அமைக்கப்படுவதன் நோக்கம் என்றும் கூட்டத் துவக்கத்தில் தலைவர் எடுத்துரைத்தார். தோழர் நு. வேலன், மாணவர் கழகச் செயலாளராகவும், தோழர்கள் ரு. அப்பாவு, ஆ. ப. சிவம் துணைச் செயலாளர்களாகவும், தோழர் ப. பெருமாள், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஐவர் கொண்ட செயற் குழுவும் அமைக்கப்பட்டது.

சர்க்கார் தரப்பு வக்கிலோ, "யுவர் ஹானர்" என்று ஆரம்பித்து, சரமாரியாக குற்றத்தின் தன்மையை எடுத்து விளக்கிக்கொண்டிருந்தார்.

மாஜிஸ்ட்ரேட் குனிந்த தலையை நிமிர்க்கவே இல்லை. என்னமோ எழுதிக்கொண்டிருந்தார். 'ஒருவேளை இப்பொழுதே தீர்ப்பை எழுதுகிறாரோ?' என்று என் வக்கிலைக் கேட்டேன்.

அவருக்கும் புரியவில்லை. மருதவாணரோ எழுதியபடியே இருந்தார்.

அவர் தீட்டியதன் பகுதி இது. கதைக்கும், இந்தப் பகுதிக்கும் சம்பந்தம் உண்டு

"அழகான தங்கச் சங்கிலி. அதிலே கோத்த சின்னஞ் சிறு கடிகாரம்! – அணிந்தவண்ணம், ஆடம்பரமாகப் போய்க்கொண்டிருக்கும் வாலிபனிடம் சென்று 'தம்பி, கடிகாரம் கூறும் 'கதை' தெரியுமா, உனக்கு?', என்று கேட்டுப் பாருங்கள்! இடி-இடியெனச் சிரிப்பான்–'கடிகாரம்கூடப் பேசுமா' என்று கேலி செய்வான். அவன் கையிலிருக்கும் அந்தக் கடிகாரத்தின் முட்களுக்குமட்டும் பேச வாய் இருந்தால்......? அப்பப்ப! கடிகாரம் அணிந்திருக்கும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையைப்பற்றியும் எவ்வளவு இரகசியங்கள் வெளிப்படும். சந்து முனையில் நின்றுகொண்டு தவித்தவன் – ஐந்து மணிக்கெல்லாம் வருகிறேன் என்று சொன்ன ஆருயிர்க் காதலரைக் காணவில்லையே என்று துடித்த கன்னிப்பெண்–இருட்டு நேரத்தில் திருட்டின்பம் காணச் சென்ற காசுக்காரன் – ஏழைகளை அடித்த அதே கையால் கோயிலுக்குச்சென்று கும்பிடும் கோணல் புத்திக்காரன்—ஒன்ரு இரண்டா?–உலகத்தைப்பற்றியே தெரிந்துகொள்ளலாம். ஆனால், கடிகாரம் எங்கே பேசுகிறது; அது தான் பேசுவதில்லையே!

கடிகாரங்கள் பேசுவதில்லையே தவிர, 'டிக் டிக்' என்று அடித்த வண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் பலரும் கவனிக்கிறார்கள். ஆனால், அது எழுப்பும் ஒவ்வொரு சப்தமும்—அதன் முட்களின் ஒவ்வோர் அசைவும்—காலத்தையன்ரு வெட்டிச் சாய்க்கின்றன. இதனை எண்ணும்போது 'கடிகாரம்—காலத்தைக் கொல்லும் காலன்' என்று கூறத் தோன்றுகிறது. இந்த விளக்கத்தை, ஆடம்பரமாகச் செல்லும் வாலிபனிடம் சொல்லிப் பாருங்கள். இடி இடியெனச் சிரிப்பான், 'அழகான வெஸ்ட்–எண்ட்—இருநூறு ரூபாய் போட்டு வாங்கினேன்—முன்னூறு ரூபாயில் சங்கிலி செய்தேன். இதையா 'எமன்' என்கிருய்—. இளித்தவாயா! என்ன பொருமையாட உனக்கு" என்று சீறுவான், கொஞ்சம் கோபக்காரனுயிருந்தால் அடிதடிகூட ஏற்படலாம்...

என் முன்னே கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கும் இத்திருட்டுக் கடிகாரத்தைப் பார்க்கும்போது, என் சிந்தையெல்லாம் மரத்துப் போய்விட்டது — நானே மரத்துப் போய்விட்டேன்.

இந்தக் கடிகாரம் ஓடவில்லை—நின்றுபோய்க் கிடக்கிறது.

சாவி கொடுத்தால், மீண்டும் ஓடலாம். கடிகாரத்துக்கு சாவி, கொடுத்தால், ஓடும்—ஆனல் உலகில் வாழ முடியாமல் திண்டாடும் திக்கற்ருேரின் வாழ்க்கைக் கடிகாரத்தை ஓடச்செய்ய, சாவி, ஏது? சிந்தை, குழம்புகிறேன்.

பணமா!—ஓரளவு, ஒப்புக்கொள்ளலாம். அந்தச் சாவி இல்லாததால்தானே, வரதன், திருடனுனன்—வள்ளி, சந்திக்குவந்தாள்.

கடிகாரத்தையும் வள்ளியையும் திரும்பத் திரும்பப் பார்க்கிறேன்.

உண்மையில், இந்தக் கடிகாரம், யாருக்குச் சொந்தம்?

வரதனுடையதா!—அல்ல.

வள்ளியுடையதா!–இல்லை.

பின் யாருடையது?

என்னுடையது!

இத்துடன், அவர், எழுதியது, முடிந்துபோயிருந்தது. கோர்ட்டில் மாட்டியிருந்த, கடிகாரத்தில், மணி ஒன்று அடித்தது, ஓய்ந்தது. வக்கில்களெல்லோரும் தத்தமது கடிகாரத்தைப் பார்த்தவண்ணம் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். மருதவாணரோ மேஜையில் சாய்ந்தபடி இருந்தார். சர்க்கார் தரப்பு வக்கிலுக்கு ஒன்றும் புரியவில்லை. இரவு எங்காவது நீண்டநேரம் 'காலட்சேபம்' கேட்டதால், தூங்கியிருப்பாரோ! மூன்று மணி நேரமாக நின்றுகொண்டிருந்த வரதன் கூண்டிலே சாய்ந்தபடி, தன் அசதியைப் போக்கிக்கொண்டிருந்தான். வள்ளி நின்றபடியே இருந்தாள்.

கோர்ட்டுச்சேவகன், 'சைலன்ஸ்! என்று கத்தினன்.

வக்கில்கள், வரதனையும், வள்ளியையும் மாறி மாறிப் பார்த்தனர்.

"சைலன்ஸ்!" என்ருன், மீண்டும் சேவகன்.

இத்தனைச் சந்தடிகேட்டும், மருதவாணர் எழுந்திருக்கவில்லை.

சர்க்கார் வக்கில், கோர்ட்டு குமாஸ்தாவுக்கு ஜாடை, காட்டினர்.

குமாஸ்தா, மாஜிஸ்திரேட் அருகில் சென்ருன்.

"சார்! சார்!! மணி ஒன்ருகிவிட்டது. சார்! சார்!!"—என்று, கூப்பிட்டான்—பிறகு கத்தினன்.

'யுவர் ஆனர்' கண் திறக்கவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

சந்தாதாரர்கள் பார்வைக்கு

24—10—54 முதல் "திராவிட நாடு" சந்தாதாரர்களின் நெம்பர் மாற்றப்பட்டுப் புது நெம்பர் தரப்பட்டிருக்கிறது. சந்தாதாரர்கள் தங்கள் புதிய சந்தா எண்ணைக் குறித்துக்கொள்வதோடு, பணம் அனுப்பும்போதும், கடிதம் எழுதும்போதும் புதிய சந்தா நெம்பரையே குறித்து எழுதும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" PreSs,
95, Tirukkachinambi St, Kancheepuram.